## இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை

# வருடாந்த அறிக்கை
# 2017

## தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு

354/2, நிபுணதா பியச, 7ம் மாடி, எல்விட்டிகெல மாவத்தை, கொழும்பு 05.

## தொலைநோக்கு

தூரநோக்கு எங்களது எதிர்கால தொழில்படை தயார்

## நோக்கம்

அபிவிருத்தி, அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் பயனுள்ள கொள்கைகளை சதிப்படுத்துவதோடு புதுமையான உத்திகளைக் கையாண்டு எமது நாட்டின் மனிதவளத்தினை அபிவிருத்தி செய்தலாகும்.

## பெறுமதிகள்

- குழுக்கலாசாரம்
- வாடிக்கையாளர் முக்கியத்துவம்
- படைப்பாற்றல்
- பாகுபாடு காட்டாமை

# நிறுவனத்தின் பின்புலம்

| | | |
|---|---|---|
| நிறுவனம் | : | இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை |
| அமைச்சு | : | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு |
| முகவரி | : | 354/2, 7வது மாடி, நிபுணதா பியச, எல்விடிகல மாவத்தை,<br>நாரஹேன்பிட்டி, கொழும்பு 05 |
| மின்னஞ்சல் முகவரி | : | chairmannhrdc@yahoo.com |
| இணையத்தள முகவரி | : | www.nhrdc.gov.lk |
| தொலைபேசி | : | 0112595680 |
| பக்ஸ் | : | 0112595680 |
| வங்கியாளர்கள் | : | இலங்கை வங்கி<br>மக்கள் வங்கி |

# தலைவரின் செய்தி

1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை மனித வள அபிவிருத்தி சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இந்தச் சபை குறுகிய காலத்தினுள் பல்வேறுபட்ட அமைச்சுகளின் கீழ் செயற்பட்ட போதிலும், 2017ம் ஆண்டிலிருந்து தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

2017ம் ஆண்டு இந்த நிறுவனம் நிறுவப்பட்ட சட்ட நோக்கத்திற்கு அமைவாக ஊழியர் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களும் ஒழுங்குசெய்யப்படுகின்றது. அத்துடன், நிர்ணயிக்கப்பட்ட தொலைநோக்கினைப் பூர்த்தி செய்வதற்கு அடையாளம் காணப்பட்ட செயற்பணியைப் பூரணப்படுத்துவதற்கு எதிர்கால ஆராய்ச்சிகளுக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணக்கமாக வடிவமைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக பொதுத் திறைசேரியினால் மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 22.8 மில்லியன் வரையறைக்குள் 2017ம் ஆண்டுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டது.

இந்தக் கருத்திட்ட தேர்வின் போது, பிரிவு 14.1 இல் குறிப்பிட்ட பிரதான பரப்புகளை பூர்த்தி செய்வதற்கு அடையாளம் காணப்பட்டவைகள் ஆகும். அவை

(அ) தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி
(ஆ) விஞ்ஞானம் மற்றம் தொழில்நுட்பத்தின் பிரயோகம்
(இ) சிறந்த வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல்.
(ஈ) பின்தங்கிய குழுக்களில் உள்ள நபர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வடிவமைத்தல்
(உ) பொருளாதார சீரமைப்பு மூலம் உரிமைகளைப் பாதுகாத்தல் அல்லது தொடர்புடைய மனித வளத்தை ஒருங்கிணைத்தல்

“எதிர்காலத்திற்கு தயாரான தொழிற்படை” எனும் தொலைநோக்கைக் கொண்டிருக்கும் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை, வினைத்திறன் மற்றும் செயற்திறன் மிக்க சேவைகளை வழங்கும் நோக்கத்துடன், இலங்கை மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்கு கீழ்வரும் கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் 2017இல் அமுல்செய்தது.

## 2017ம் ஆண்டில் அமுல்செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

**தனியார் துறையில் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கான பாதை வரைபடம்.**

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2016ம் ஆண்டு இலங்கை தொழிற்படை ஆய்வின் நான்காம் காலாண்டுக்கு அமைவாக, தற்போதைய பெண்களின் வீதம் 36 சதவீதமாகும். அதனால், குழு நியமிக்கப்பட்டதுடன், கீழ்வரும் நோக்கங்களை அடைவதற்கு எந்தெந்த தலையீடுகள் அவசியம் என்பதற்கு ஐந்து பிரதான பரப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

- ❖ தேசிய கொள்கை மற்றும் தொழில் சட்ட மறுசீரமைப்புகள்
- ❖ அரச மற்றும் தனியார் துறைகளில் மனிதவளக் கொள்கை தலையீடுகள்
- ❖ தனியார் துறையில் பெண் ஊழியர்களை அதிகமாக சேர்த்துக்கொள்வதற்கு ஊக்குவித்தல்
- ❖ வெகுஜன ஊடாகத்தின் ஊடாக பொதுமக்கள் விவாதங்களின் ஊடாக சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தல்.
- ❖ கல்வி மறுசீரமைப்புகள்

இறுதியாக குழு ‘‘இலங்கையில் தனியார் துறையில் பெண் தொழிற்படையில் பங்களிப்பினை அதிகரிப்பதற்கான வரைபடம்’’ தொடர்பான அறிக்கையை அபிவிருத்தி செய்தது. இந்த அறிக்கையின் முதல் பிரதி பிரதம மந்திரியின் பிரதி பிரதான அலுவலரிடமும் முன்னாள் அமைச்சரான ரோசி சேனாநாயக்கவிடமும் கையளிக்கப்பட்டது.

**தொழில்நுட்பத்துறைக்கான திறன்சார் தொழிலாளர்கள்**

இந்த நிகழ்ச்சித்திட்டம் தரவு விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டங்களில் 5 வருடங்களில் 1000 இளைஞர்களை உருவாக்கவதற்கான விரைவு பயிற்சித்திட்டத்தை செயற்படுத்தும் கைத்தொழிற்துறையுடன் இணைந்து நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம், வாய்ப்புகளை உருவாக்கல் மற்றும் உரிய நிறுவனங்களுன் இணைந்து அடுத்த ஐந்து வருடங்களுக்கான புதிய தரவு விஞ்ஞான நிகழ்ச்ச்சித்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கும் அறிமுகப்படுத்தவதற்கும் 1000 இளைஞர்களை தரவு விஞ்ஞான தொழில்நுட்பதற்திற்கு உள்ளீர்த்தல்.

**மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து திரும்பி வருபவர்களுக்கு பிரதான நலன்விரும்பிகளின் ஆலோசனையுடன் உபாயமார்க்கத்தை உருவாக்கல்**

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து திரும்புவர்களை மீளமைக்க, மீள்திரும்புவோருக்கு சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கு அரச மற்றும் தனியார் நலன்விரும்பிகளுக்கு பயிற்சிகளை வழங்கல். இதற்கமைவாக வத்தளை மற்றும் நீர்கொழும்பில் 13 2017 செப்டெம்பர் 13 நவம்பர் 21 ம் திகதிகளில் இரண்டு

விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தொழில் ஊக்குவிப்பு, தொழில்பயிற்சி மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை பலப்படுத்தல்.

**TVEC உடன் இணைந்து NVQ முறைமை ஊடாக TVET துறை தரத்தினை மேம்படுத்தல்**

பிரதம மந்திரி, இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையை குறுகிய கால எதிர்காலத்திற்கான சுற்றுலாத் தொழிற்துறை ஊழியர்களின் தேவைகளை மதிப்பீடு செய்ய பணியமர்த்தியுள்ளதுடன், அதே நேரத்தில் நாட்டிலுள்ள சுற்றுலாத்துறையின் அனைத்து வசதிகளையும் மதிப்பீடு செய்தல் மற்றும் பயிற்சி இடைவெளிகளைக் குறைக்கும் பணியையும் இலக்காக வழங்கியுள்ளார். இந்த நிகழ்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் வளர்ந்துவரும் கைத்தொழிற்துறைக்கு திறமையான ஊழியர்களை வழங்கல் மற்றும் இரண்டு சுற்றுலா இலக்குக் குழக்களை நியமித்து அதனூடாக கைத்தொழிற்துறை நிபுணர்களின் கருத்துகள், பரிந்துரைகள் மற்றும் உள்ளீடுகளை பகுப்பாய்வு செய்தலாகும்.

**கைத்தொழிற்துறைக்கு முச்சக்கர வண்டி சாரதிகளை மறுசீரமைப்பதற்கு CSC அங்கீகாரமளிக்கப்பட்ட உபாயமார்க்கத்தை அமுல்படுத்தல்**

இந்தக் கருத்திட்டத்தின் நோக்கம், சிக்கலான வளரும் கைத்தொழிற்துறைக்கு திறமையான வழங்கலை அதிகரித்தல் ஆகும். கலந்துரையாடல்கள் EFC, SLTDA, தேசிய வணிக சம்மேளனம், முச்சக்கர வாகன சங்கம் மற்றும் TVEC உடன் மேற்கொள்ளப்பட்டன. TVEC வினால் பொலிஸ் பயிற்சிப் பாடசாலை, ஹொட்டல் கைத்தொழிற்துறை, TVEC, NAITA மற்றும் SLITHM. துறை கவுன்சில் என்பவற்றின் ஒத்துழைப்புடன் ‘‘சுற்றுலாப் பயணிகளுக்கான டக்சி சாரதி’’ மீது மாதிரி அபிவிருத்தி செய்யப்பட்டது.

**முச்சக்கரவண்டிச் சாரதிகளை கைத்தொழிற்துறைக்கு மறுசீரமைப்பதற்கு அவசியமான உபாயமார்க்கங்களை அடையாளம் காணும் ஆய்வு நடாத்தப்பட்டது.**

இந்த ஆய்வின் நோக்கம்; முச்சக்கர வண்டி சாரதிகளின் சமூக-பொருளாதார நிலையை அடையாளம் காணல், அவசியமான திறன் பயிற்சித் தேவையை அடையாளம் காணல், போக்குவரத்து சேவைக்கு மாற்று சேவையை அடையாளம் காணல், வளரும் கைத்தொழிற்துறைக்கு முச்சக்கர வண்டி சாரதிகளை மறுசீரமைப்பதற்கான உபாயமார்க்கத்தை அபிவிருத்தி செய்தல். இந்த ஆய்வு கொழும்பு, கம்பஹா, பதுளை, குருநாகல், இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களில் தேசிய மனிதவள அபிவிருத்தி சபை ஊழியர்களின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டது.

**அரச சேவை ஊழியர்களுக்கு வெளிநாட்டு பயற்சிகளை வழங்குதல் - 2017**

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையினால் 2017ம் ஆண்டு எட்டு வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை பொது அரச முகாமைத்துவ ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், பல்கலைக்கழக நிர்வாக ஊழியர்கள் மற்றும் பல்கலைக்கழக தொழில்நுட்ப ஊழியர்கள்

போன்ற வேறுபட்ட இலக்கு குழக்களுக்கு அறிமுகப்படுத்த முடிந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் அரசாங்க ஊழியர்களின் பணி சார்ந்த தகைமை மற்றம் தனிப்பட்ட வளர்ச்சியை அதிகரித்தல் ஆகும்.

**உற்பத்தித்திறன் மற்றும் நெறிமுறை அரச சேவை கலாச்சாரத்திற்கான பொதுவான தகுதிச் சட்டகம்**

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் வரும் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையானது அரசதுறையில் உள்ள அலுவலர்களின் திறன்கள் மற்றும் தகுதியை மேம்படுத்துவதற்கான கற்கையை மேற்கொண்டது. நிபுணர் குழுவுடன் இணைந்து இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை மேற்கொண்ட கற்கையின் அடிப்படையில் அரச சேவைத் துறைக்கான பொதுவான தகுதிச் சட்டகம் அபிவிருத்தி செய்யப்பட்டது. இந்த பொதுவான தகுதி சட்டகம் 27 ஜூன் 2017ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம்தில் அங்கீகரிக்கப்பட்டது.

**இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையின் தொடர் விரிவிரைகள்**

எங்கள் சபை, முகாமைத்துவ மட்டத்திலும் அதன் கீழ் பதவிகளிலும் உள்ள அரச சேவை ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு வாடிக்கையாளர் கவனிப்பு, மனித நம்பிக்கை, உயர் மனிதவள போக்கு, அரச துறையினரின் கணக்கில் திறனை மேம்படுத்தல், சிறந்த ஆளுகை மற்றும் அரச சேவையில் வகிபாகம், செபர் பாதுகாப்பு பேச்சு மற்றும் அரசதுறையினருக்கான வினைத்திறன் பணி முறைகளை அறிமுகப்படுத்தல் எனும் தலைப்புகளில் தொடர்ச்சியான விரிவுரைகளை நடாத்தியது. அரச சேவையில் பல்வேறு துறைகளில் உள்ள பங்குபற்றுனர்கள் பிரதிநிதித்துவம் வகித்தவர்கள், அரச சேவை ஊழியர்களின் நன்மைக்காக நடாத்தப்பட்ட தொடர்ச்சியான விரிவுரைகள் தொடர்பாக தமது நேர்மறையான பதிலளிப்பை வெளிப்படுத்தினர். பல்வேறு விடங்களை உள்ளடக்கி பிரசித்தபெற்ற குழுவின் ஊடாக அரச அலுவலர்களுக்கான தொடர்ச்சியான விரிவுரைகள் நடாத்தப்படும்.

**இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் புள்ளிவிபர தகவல் அறிக்கை**

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் முகாமைத்துவம் இலங்கையில் கல்வித்துறை சாந்த நலன்விரும்பிகளின் தகவல் இடைவெளியை நிரப்புவதற்கு புள்ளிவிபர தகவல் அறிக்கையை வெளியிடுவதற்கு தீர்மானத்தை மேற்கொண்டது. இதற்கமைவாக இறுதி தகவல் 2017ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

**பணிப்பாளர்களின் கையேடு**

கௌரவ பிரதம மந்திரியின் பணிப்புரைக்கு அமைவாக, தேசிய மனித வள அபிவிருத்தி சபை இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்துடன் இணைந்து அரச தொழில்முயற்சி தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கான நல்லாளுகை மீதான கையேட்டினை தற்போதுள்ள

வழிகாட்டல்களை இற்றைப்படுத்தி அபிவிருத்தி செய்தது. இந்தக் கையேடு பணிபாளர் சபையின் கவனத்தின் கொள்ள வேண்டிய பரப்புகள் தொடர்பாக வழிகாட்டல்களையும் தெளிவுபடுத்தல்களையும் வழங்குகின்றது. இந்த கையேடு அரசதுறை தொழில்முயற்சி தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு, அவர்களின் நிறுவனத்தை வினைத்திறனுடன் முகாமைப்படுத்துவதற்கு சிறந்த ஆளுகைக்கு வழிகாட்டுகின்றது. 2017 டிசம்பர் 05ம் திகதி நடைபெற்ற இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் வருடாந்த விருது வழங்கும் வைபவத்தில் கௌரவ பிரதம மந்திரிக்கு முதலாவது பிரதி கையளிக்கப்பட்டது.

**“அரச துறையில் புதிய வழியில் பணிபுரிதல்” மீதான அறிக்கை**

தேசிய மனிதவள அபிவிருத்தி சபை அரசதுறையில் புதிய வழியில் பணிபுரிதலை மேம்படுத்தல் மீதான அறிக்கையை தயார் செய்தது. இந்த அறிக்கை ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டதுடன், இதன் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பதில் வரும்வரை காத்திருக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையில் கையாளப்பட்ட விடயங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக பொது சேவை மற்றும் சமூகத்தின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல், உற்பத்தித்திறனை அதிகரித்தல், உடன்பட்ட இலக்குகளுக்கு உள்ளான கடைப்பிடித்தல் உள்ளடங்களாக எந்தவொரு நியமனம் மற்றும் ஊடுறுவும் பொறுப்புணர்வு பொறிமுறைக்கான பகுத்தறிவைப் புகுத்துவதன் ஊடாக மிகச்சிறந்த நிபுணத்துவத்தை ஊக்குவித்தல்.

**கணக்காய்வுக் குழுக்களிலல் சிறந்த ஆளுகையை மேம்படுத்தவதற்கு இலங்கை பட்டய நிறுவனம் தேசிய மனித வள அபிவிருத்தி சபையுடன் இணைந்துள்ளது.**

தேசிய மனிதவள அபிவிருத்தி சபை இலங்கை பட்டய நிறுவனத்துடன் இணைந்து “கணக்காய்வுக் குழுவின் வகிபாகம்” தொடர்பான செயயலர்வை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் 2017 ஜூலை 06ம் திகதி நடாத்தியது. இதில் பொது தொழில்முயற்சியின் கணக்காய்வுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 180ற்கும் மேற்பட்ட சிரேஸ்ட அரச அலுவலர்கள் பங்குபற்றினர். பிரதம மந்திரியின் பணிப்புரையின் கீழ், பொது தொழில்முயற்சியின் தலைவர்களின் திறன்களை உருவாக்குவதற்கும் சிறந்த ஆளுகையை மேம்படுடுத்துவதற்கும் உதவுவதற்குமாக இது மேற்கொள்ளப்பட்டது.

தினேஸ் வீரக்கொடி
தலைவர்

## பொருளடக்கம்

1. நிறுவனத்தின் பின்புலம் மற்றும் விடயப்பரப்பு ........ 1

2. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு........ 4

3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை – ஒழுங்கமைப்பு கட்டமைப்பு வரைபடம் ........ 6

4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பதவி ........ 7

5. 2017ம் ஆண்டினுள் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ........ 11

5.1 தனியாளர் துறையில் பெண் தொழிலாளர் படையை அதிகரிப்பதற்கான பாதை வரைபடம் ........ 11

5.2 தொழில்நுட்பத்துறைக்கு திறன்சார் பணியாளர்கள் ........ 15

5.3 மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து திரும்புவோரை மீளமைக்க உபாயமார்க்கமொன்றை முன்வைப்பதற்கு பிரதான நலன்விரும்பிகளுடன் ஆலோசனைகளை நடாத்துதல் ........ 16

5.4 TVEC உடன் இணைந்து ஏஒஒ முறைமை ஊடாக வுஏநுவு துறை தரத்தினை மேம்படுத்தல் ........ 20

5.5 கைத்தொழிற்துறைக்கு முச்சக்கர வண்டி சாரதிகளை மறுசீரமைப்பதற்கு ஊளுஊ அங்கீகாரமளிக்கப்பட்ட உபாயமார்க்கத்தை அமுல்படுத்தல் ........ 25

5.6 அரச சேவை ஊழியர்களுக்கு வெளிநாட்டு பயற்சிகளை வழங்குதல் - 2017 ........ 26

5.7 உற்பத்தித்திறன் மற்றும் நெறிமுறை அரச சேவை கலாச்சாரத்திற்கான பொதுவான தகுதிச் சட்டகம்...... 29

5.8 இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையின் தொடர் விரிவிரைகள் ........ 29

5.9 இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் புள்ளிவிபர தகவல் அறிக்கை ........ 32

5.10 பணிப்பாளர்களின் கையேடு........ 32

5.11.“அரச துறையில் புதிய வழியில் பணிபுரிதல்” மீதான அறிக்கை........ 32

5.12 கணக்காய்வுக் குழுக்களிலல் சிறந்த ஆளுகையை மேம்படுத்தவதற்கு இலங்கை பட்டய நிறுவனம் தேசிய மனித வள அபிவிருத்தி சபையுடன் இணைந்துள்ளது........ 33

5.13 ISO 9001:2015 சான்றளிப்பினை உறுதிப்படுத்தலை இலங்கை தேசிய மனித வள ஆணைக்குழு தொடர்கின்றது........ 34

6. 2017ம் ஆண்டினுள் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் வெளியீடுகள்........ 335

7. 31.12.2017ம் திகதியன்றுள்ளவாறான நிதியியல் நிலமைக் கூற்று ........ 36

8. நிதிச் செயலாற்றுகை கூற்று ........ 37

9. 2017 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் உரிமைப் பங்கு மாற்றக்கூற்று........ 38

10.காசுப் பாச்சல் கூற்று........ 39

11.குறிப்புகள் ........ 42

12.குறிப்புகள்,முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம், விளக்கக் குறிப்புகள் ........ 48

13.கணக்காய்வு அறிக்கை மற்றும் பதில ........ 52

# 1. நிறுவனத்தின் பின்புலம் மற்றும் விடயப்பரப்பு

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை, இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் முக்கிய பணிகளை ஆற்றுவதற்காக 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமாகும் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மனிதவள அபிவிருத்தி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குதல், மனிதவள அபிவிருத்திக்காக கொள்கைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல், செயற்படுத்துதற்கு உதவிகளை வழங்குதல் போன்ற முக்கிய பணிகளின் பொறுப்பினை வகிக்கின்றது. அதன் பிரதான நோக்கமாக இருப்பது உரிய அமைச்சருக்கும், அரசுக்கும் மனிதவள அபிவிருத்தி தொடர்பான விதப்புரைகளை வழங்கும் உயர் மட்ட நிறுவனமாக செயற்படுதல் ஆகும்.

## 1.1 நிறுவன அறிமுகம்

தேசிய மட்டத்திலான ஆலோசனை சபையாக 1987ம் ஆண்டு ஜுன் மாதம் 05ம் திகதி இலங்கை தேசிய மனிதவள சபை ஆரம்பமானது, இளைஞர் விவகார அமைச்சின் ஓர் அலகாகவாகும். அதன் பின்னர் 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் ஊடாக சுயாதீனமாக தொழில்முயற்சியாண்மை சபையாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் நிறுவப்பட்டது. அன்றிலிருந்து குறுகிய காலத்தினுள், அதாவது 2000ம் ஆண்டு இந் நிறுவனம் கைத்தொழில் கல்வி மற்றும் தொழில் அமைச்சின் கீழ் சாட்டப்பட்டதுடன், 2001ம் ஆண்டு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை கல்வி மற்றும் காலாச்சார அமைச்சின் கீழ் சாட்டப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் அரசு மாற்றமடைந்ததும் இந்த நிறுவனம் திறன் அபிவிருத்தி, தொழில் மற்றும் கைத்தொழில் பயிற்சி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. இவ்வாறு குறுகிய காலத்தினுள் பல்வேறுபட்ட அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்த இந்த நிறுவனம் தற்போது கொள்கைத் திட்டமிடல், பொருளாதார நடவடிக்கை, சிறுவர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

## 1.2 தொலைநோக்கு

துாரநோக்கு எங்களது எதிர்கால தொழில்படை தயார்

## 1.3 நோக்கம்

அபிவிருத்தி, அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் பயனுள்ள கொள்கைகளை சந்தைப்படுத்துவதோடு புதுமையான உத்திகளை கையாண்டு எமது நாட்டின் மனிதவளத்தினை அபிவிருத்தி செய்தலாகும்.

## 1.4 நோக்கம்

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் நோக்கமான அரசுக்கு மனிதவளத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குவதற்கான நிறுவனச் சட்டகத்தை உருவாக்குதல். மனிதவள அபிவிருத்தி கொள்கை செயற்பாட்டுத் திட்டம், கொள்கை மீளாய்வு மற்றும் மனிதவள பிரிவின் வளர்ச்சி போன்ற பிரிவுகள் தொடர்பாக இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை பொறுப்பினை வகிக்கும். சபையின் சட்டத்திறகு அமைவாக சபையின் பணிகள் கீழ்வருமாறு அமைகின்றது.

1. (அ) தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி
   (ஆ) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்
   (இ) வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தல்
   (ஈ) பாதிக்கப்பட்ட குடும்பக் குழுக்களுக்கு சமூகப் பாதுகாப்பைத் திட்டமிடுதல் மற்றும்
   (உ) பொருளாதார மீள்கட்டமைப்பு மூலம் உரிமைகளைப் பொற்றுக்கொடுத்தல் தொடர்பாக அல்லது மனித வளத் தொகுதியை நியாயப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் உட்பட தேசிய மனிதவள கொள்கையின் அனைத்துப் பிரிவுகள் தொடர்பாகவும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

2. தேசிய கொள்கைக்கு அமைவாக மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அரசுக்கு சமர்ப்பிப்பதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு விதப்புரையை வழங்குதல்.

3. தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் செயற்படுத்தப்படும் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்தல் மற்றும் பரீசீலித்துப்பார்த்தல் மற்றும் தேவையாயின், அக்கொள்கைகளுக்கு திட்டங்களுக்கு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு செய்யவேண்டிய மாற்றங்களை அமைச்சருக்கு விதப்புரை செய்தல்.
4. அரசினால் அனுமதியளிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுவதை ஆராய்ந்து பார்த்தல்.

5. இந்த சட்டத்தின் உபஅட்டவணையில் குறிப்பிடப்பட்ட யாதேனும் வியம் தொடர்பாக யாதேனும் கருத்திட்டங்களை செயற்படுத்தல். அவ்வாறு இருந்த போதிலும் கருத்திட்டம் வேறுயாதேனும் அமைச்சருக்கு சாட்டப்பட்ட யாதேனும் விடயம் தொடர்பாக இருக்குமாயின், அதனை செயற்படுத்தல் என்பது அந்த அமைச்சரின் சம்மதத்துடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

6. தேசிய நோக்கத்திற்கு அமைவாக மனிதவளத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவசியம் எனக் கருதும் நன்மைகள் அல்லது பின்னர் பலன்தரக்கூடியவை என கருதும் அனைத்தையும் செயற்படுத்தல்.

## 1.5 சபைக்கு உள்ள அதிகாரங்கள்

1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 (2)(1)ம் உபபந்தியின் கீழ் சபைக்குரிய அதிகாரங்கள் இவையாகும்.

(அ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான ஆய்வுகள், விசாரணைகள், கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

(ஆ) மனிதவள அபிவிருத்திக்குரிய விடயங்கள் தொடர்பாக நிபுணர்களின், தொழில்சார்ந்தவர்களின் அல்லது மக்களின் கருத்தினை அறிந்து கொள்வதற்கு வெளிப்படையாக அல்லது தனிப்பட்ட ரீதியில் விடங்களை கேட்டறிதல்.

(இ) சபையினால் நிறைவேற்றப்படும் பணிகளுக்கு சமமான பணிகளை இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் என்பவற்றுடன் தொடர்புகளைப் பேணுதல்.

(ஈ) இந்த சட்டத்தின் கீழ் சபையின் பணிகளை மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு வருதல் மற்றும் அவற்றினை நிறைவேற்றுதல்.

(உ) இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட நபர்களின் ஊடாக மனிதவள அபிவிருத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

(ஊ) மனிதவள அபிவிருத்தி மற்றும் அதற்குரிய விடயங்கள் தொடர்பான தகவல் தரவு வங்கியொன்றினை நிறுவி அதனைப் பேணுதல்.

(எ) ஏதேனும் வங்கி அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பு கணக்குகளை உருவாக்கி அவற்றைப் பேணுதல்.

(ஏ) அசையும் மற்றும் அசையா இருவகை நன்கொடை மற்றும் நிவாரணங்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்.

(ஐ) மனித வள அபிவிருத்தியில் பல்வேறுபட்ட பிரிவுகளில் திறன் நிபுணத்துவ ஒதுக்கொன்றினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தினைக் கொண்டு சபை அலுவலர்களின் திறமையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஒ) சபையின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அவசியமான குழு நிபுணத்துவக் குழு மற்றும் ஆலோசனைச் சபை என்பவற்றை நிறுவுதல்.

(ஓ) அமைச்சுகளில், அரச திணைக்களங்களில், அரச கூட்டுத்தாபனங்களில், சட்டபூர்வ சபைகளில், மாகாண சபைகளில், உள்ளூராட்சி நிறுவனங்களில் மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் தரவுகள் உட்பட சபையினால் அவசியம் எனக் கருதப்படும் தகவல்களை கோருதல் மற்றும் அவற்றினை பெற்றுக்கொள்ளுதல்.

(ஔ) சபையின் பணி அதிகாரங்கள் மற்றும் பணியினை நிறைவேற்றுதல் என்பவற்றை செயற்படுத்துதல் மற்றும் செயற்படுத்துவதற்கு அவசியம் என எண்ணும் நன்மையானது அல்லது பின்னர் பலன்தரக்கூடியது எனும் அனைத்தையும் செயற்படுத்தல்.

## 2. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு அமைச்சின் கீழ் செயற்படும் இந்த சபை 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவப்பட்ட தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் என்பவர்கள் உள்ளடங்களாக 20 நபர்களைக் கொண்டு அமைந்துள்ளது. இதில் 15 பேர் உத்தியோகபூர்வ அதிகாரத்துடனும் உரிய நிறுவனங்களில் இருந்து 5 பேராகவும் நியமிக்கப்படுவர். இதைவிட உரிய துறையில் முன்னனுபவம் மற்றும் திறமை என்வற்றை கருத்தில் கொண்டு 5பேர் நியமிக்கப்படுவதுடன், இதில் இருவர் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவராவர். சபை அங்கத்தவர்களில் ஒருவரை நிறைவேற்றுத் தலைவராக பெயரிடுவதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதான நிறைவேற்று அலுவலர் சபையின் தலைவராவார். சுபை 31.12.2017ம் திகதி 20 அங்கத்தவர்களை கொண்டமைந்திருந்தது. 2017ம் ஆண்டு சபையின் பணிப்பாளர் சபை கீழ்வரும் அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

**<u>சட்டத்தின் 3(1)(அ) வில் இருந்து (வ) வரையிலான பந்தியின் கீழ் நியமனங்கள்</u>**

1. தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை
2. செயலாளர் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு
3. செயலாளர் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு
4. செயலாளர், கல்வி அமைச்சு
5. செயலாளர் விஞ்ஞான, தொழிநுற்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
6. செயலாளர், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு
7. செயலாளர், பொதுநிர்வாகம் மற்றும் பொதுமுகாமைத்துவ அமைச்சு
8. செயலாளர், சுகாதார போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
9. செயலாளர் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
10. செயலாளர், நீர்ப்பாசனம் மற்றும் விவசாய அமைச்சு
11. தலைவர், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு
12. பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு
13. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
14. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
15. தலைவர், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
16. செயலாளர், நிதிஅமைச்சு

**சட்டத்தின் 3(2)(ஐ) பந்தியின் கீழ் நியமனங்கள்**


1. பேராசிரியர். குமென்னா குனரத்ன, பீடாதிபதி, மனித நேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
2. பேராசிரியர. ரங்ஹிக ஹல்வத்துர, முதுநிலை விரிவுரையாளர், மொறட்டுவ பல்கலைக்கழகம்.
3. கலாநிதி. ரனில் அபேசிங், 178, ஜோர்ஜ் ஆர்.டீ.சில்வா மாவத்தை, கண்டி.
4. கலாநிதி. சந்திரா எம்புல்தெனிய ,165/C பொல்ஹேன்கொட வீதி, கொழும்பு - 05

**2017ம் ஆண்டு இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் நிர்வாகக் குழுக் கூட்டம் மற்றும் நடத்தப்பட்ட தினங்கள் மற்றும் பங்குபற்றிய அங்கத்தவர்களின் விபரங்கள்**

| தொடர் இலக்கம் | நிர்வாக சபையின் அங்கத்தவர்களின் பெயர் | 2017.03.14 | 2017.06.12 | 2017.09.15 | 2017.12.12 |
|---|---|---|---|---|---|
| 01. | தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை | √ | √ | √ | √ |
| 02. | செயலாளர் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு | √ | √ | - | - |
| 03. | செயலாளர் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு | - | √ | √ | - |
| 04. | செயலாளர், கல்வி அமைச்சு | √ | - | √ | - |
| 05. | செயலாளர் விஞ்ஞான, தொழிநுற்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | √ | - | - | - |
| 06. | செயலாளர், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | √ | √ | √ | √ |
| 07. | செயலாளர், பொதுநிர்வாகம் மற்றும் பொதுமுகாமைத்துவ அமைச்சு | - | - | √ | - |
| 08. | செயலாளர், சுகாதார போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு | √ | - | - | - |
| 09. | செயலாளர் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு | √ | - | - | √ |
| 10. | செயலாளர், நீர்ப்பாசனம் மற்றும் விவசாய அமைச்சு | - | - | - | - |
| 11. | பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு | √ | √ | - | √ |
| 12. | தலைவர், மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு | - | - | √ | √ |
| 13. | தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு | √ | - | NA | √ |
| 14. | தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | - | √ | √ | √ |
| 15. | தலைவர், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை | √ | √ | - | - |
| 16. | செயலாளர், நிதிஅமைச்சு | √ | NA | NA | √ |
| 17. | பேராசிரியர். குமென்னா குனரத்ன | √ | √ | √ | - |
| 18. | பேராசிரியர. ரங்ஹிக ஹல்வத்துர | √ | √ | √ | - |
| 19· | கலாநிதி. ரனில் அபேசிங் | √ | - | - | - |
| 20. | கலாநிதி. சந்திரா எம்புல்தெனிய | √ | √ | - | √ |
| | மொத்த பங்குபற்றுனர்கள் | 15 | 10 | 09 | 09 |

NA – Not Appointed

### 3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை – ஒழுங்கமைப்பு கட்டமைப்பு வரைபடம்



## 4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பதவி

| பதவிப் பெயர் | அனுமதி வழங்கப்பட்ட பதவியணி | 31.12.2017 திகதியன்று சேவையில் இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை | 31.12.2017 திகதியன்று வெற்றிடம் | பெயர் |
|---|---|---|---|---|
| தலைவர் | 01 | 01 | - | திரு தினேஸ் வீரக்கொடி |
| பணிப்பாளர் | 01 | 01 | - | திரு கே ஏ லலிததீர |
| உதவிப் பணிப்பாளர் | 03 | 03 | - | திரு எஸ். தணிகசீலன்<br>திருமதி ஜே.ஏ.சி.ஜி.ஜயசிங்க<br>திருமதி என்.யு.எஸ்.கருணாசேகர |
| சபைத் தலைவர்/சட்ட அலுவலர் | 01 | 01 | - | செல்வி ஜி.ஜி.கசுனி உப்பலா |
| ஆய்வு உத்தியோகத்தர் | 04 | 04 | - | திருமதி ஆர்.எம்.ஏ.யு.கே. இரத்னாயக்க<br>திருமதி ஏ.எச்.டி.சி. பெரேரா<br>திரு டி செந்தில்நாதன்<br>செல்வி. என்.டி.எதிரிசிங்க |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | - | செல்வி. கே.வீ.எஸ்.எரங்கா |
| மொழிபெயர்ப்பாளர் | 01 | - | 01 | - |
| அபிவிருத்தி அலுவலர் | 04 | 04 | - | திருமதி பீ.ஈ.எஸ். சேனாரத்ன த சில்வா<br>திரு ஆர்.டி.சி.எஸ் ராஜபக்ச<br>திரு.கே.பி.ஜி.பெரேரா<br>செல்வி.சீ.குணசிங்க |
| தலைவரின் தனிப்பட்ட உதவியாளர் | 01 | - | 01 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 08 | 07 | 01 | திரு.சி.ஆர்.மத்தகே<br>செல்வி.எம்.ஜி.என்.தில்ஹாரி<br>செல்வி கே சி முத்துமால<br>செல்வி ஜி.ஜி.எம்.சத்தாமங்கள<br>செல்வி. ஆஷா சுரேணி எதிரிசிங்க<br>செல்வி.ஆர்.எல்.ஜ.சஞ்சீவனி |
| சாரதி | 04 | 03 | 01 | திரு.ஜி.எம். பின்னதுாவ<br>திரு.டபில்யூ.டெரன்ஸ் பியல்<br>திரு.ஆர்.சி.ஆர். ஜயவர்தன |
| அலுவலக உதவியாளர் | 04 | 03 | 01 | திரு என்.ஜி.நதுன் மதுரங்க<br>திரு.டபில்யூ.ஆர்.ஏ பிரின்ஸ் கிரான்வில்<br>செல்வி ஏ நயனா பிரியதர்சனி |
| **மொத்த எண்ணிக்கை** | **33** | **27** | **06** | |

**புதிய நியமனங்கள்**

| பெயர் | பதவி | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| செல்வி.என்.யு.எஸ்.கருணாசேகர | உதவிப் பணிபாளர் (நிதி) | 2017/01/23 |
| திரு.ஆர்.சி.ஆர். ஜயவர்தன | சாரதி | 2017/05/04 |

**சேவையில் இருந்து இராஜினாமாச் செய்தல்**

| பெயர் | பதவி | இராஜினாமச் செய்த தினம் |
|---|---|---|
| திரு.டபில்யூ.எம்.லக்சித ரஜித் | முகாமைத்துவ உதவியாளர் | 2017/09/29 |
| திரு டி.எச.டபல்யூ. லக்மால் | சாரதி | 2017/10/03 |

## உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை ஊழியர்களின் விடய அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. 2017ம் ஆண்டினுள் பயற்சிகளில் பங்குபற்றிய ஊழியர்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**உள்நாட்டு பயிற்சிகள் – தனிப்பட்டவை / குழு**

**உள்நாட்டு பயிற்சிகள் – தனிப்பட்டவை**

| | **உள்நாட்டு பயிற்சிகள்** | | | |
|---|---|---|---|---|
| **இல** | **பெயர்** | **பதவி** | **பயிற்சியின் பெயர்** | **நிறுவனம்** |
| 1 | செல்வி.எம். சத்தமங்கள | முகாமைத்துவ உதவியாளர் | மனித வள முகாமைத்துவத்தில் தொழில்சார் தகைமை | பணியாளர் முகாமைத்துவத்திற்கான நிறுவனம் (IPM) |
| 2 | செல்வி.கே.வி.எஸ். எரங்க<br>திரு.ஆர்.சி.ஆர். ஜயவர்தன | நிர்வாக அலுவலர்<br>சாரதி | தூண்டல் பயிற்சி மற்றும் நேர்மறைச் சிந்தனை | திறன்கள் அபிவிருத்தி நிதியம் லிமிடட் |
| 3 | டாக்டர்.கே.ஏ.லலிததீர | பணிப்பாளர் | சான்றளிக்கப்பட்ட நிபுணத்துவ முகாமையாளர்களின் நிறுவனத்தின் அங்கத்தவர் | சான்றளிக்கப்பட்ட நிபுணத்துவ முகாமையாளர்களின் நிறுவனம் (CPM) |
| 4 | செல்வி.மதுபாரீனி சத்தமங்கள் | முகாமைத்துவ உதவியாளர் | நிறைவேற்றுதர அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | பணியாளர் முகாமைத்துவத்திற்கான நிறுவனம் (IPM) |
| 5 | செல்வி.கே.வி.எஸ். எரங்க | நிர்வாக அலுவலர் | உள்ளக கணக்காய்வு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை | SDFL |
| 6 | செல்வி.ஜே.ஏ.சி.பி. ஜயசிங்க | உதவிப் பணிப்பாளர் | முறையான கடிதம் எழுதும் திறன்கள் | மிலோதா |
| 7 | செல்வி.என்.யு.எஸ்.கருணாசேகர | உதவிப் பணிப்பாளர் | பொதுத் துறைக்கான நிதியியில் ஒழுங்குவிதிகள் | மிலோதா |
| 8 | செல்வி.ஜே.ஏ.சி.பி. ஜயசிங்க | உதவிப் பணிப்பாளர் | உற்பத்திதிறன் மேம்படுத்தலுக்கான தலைமைத்துவம் | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் |
| 9 | செல்வி.என்.டி. எதிரிசிங்க | ஆய்வு உத்தியோகத்தர | E-Views Software மென்பொருளைப் பயன்படுத்தி Econometrics பிரயோக அணுகுமுறைப் பிரயோகம் | மத்திய வங்கி |
| 10 | செல்வி.ஜி.ஜி. கசுனி உத்பலா | சட்ட அலுவலர் மற்றும் பணிப்பாளர் சபை செயலாளர் | CPM பிராந்திய முகாமைத்துவ மாநாடு – தலைமைத்துவ நிலை மாற்றம் Regional | பணியாளர் முகாமைத்துவத்திற்கான நிறுவனம் (IPM) |
| 11 | டாக்டர்.கே.ஏ. லலலிததீர | பணிப்பாளர் | CMA தேசிய முகாமைத்துவ கணக்கியல் மாநாடு | சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் முகாமைத்துவ நிறுவனம் |

**வெளிநாட்டு பயற்சி**

| இல | பெயர் | பதவி | பயிற்சியின் பெயர் | நிறுவனம் |
|---|---|---|---|---|
| 01 | திரு.எஸ்.தணிகசீலம் | உதவிப் பணிப்பாளர் | முகாமைத்துவ அபிவிருத்தி தகுதி அபிவிருத்திப் பயிற்சி | மலேசியா புத்ரா பல்கலைக்கழகம் |
| 02 | டாக்டர்.கே.ஏ.லலிததீர | பணிப்பாளர் | TFI@ 10 Asia Skills Leaders Forum 2017 | ITE Education Services (ITEES) சிங்கப்பூர் |
| 03 | செல்வி.ஜே.ஏ.சி.பி.ஜயசிங்க | உதவிப் பணிப்பாளர் | முகாமைத்துவ அபிவிருத்தி தகுதி அபிவிருத்திப் பயிற்சி | மலேசியாக புத்ர பல்கலைக்கழகம் |
| 04 | செல்வி. எம்.ஏ.எச்.டி.சி. பெரேரா | ஆய்வு உத்தியோகத்தர் | முகாமைத்துவ அபிவிருத்தி தகுதி அபிவிருத்திப் பயிற்சி | மலேசியாக புத்ர பல்கலைக்கழகம் |

# 5. 2017ம் ஆண்டினுள் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

## 5.1 தனியாளர் துறையில் பெண் தொழிலாளர் படையை அதிகரிப்பதற்கான பாதை வரைபடம்

இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களித்தினால் வெளியிடப்பட்ட 2016ம் ஆண்டின் நான்காம் காலாண்டு தொழிலாளர் படை ஆய்வு அறிக்கைக்கு அமைவாக, தற்போதைய பெண் தொழிற்படை பங்களிப்பு முப்பதியாறு சத வீதமாகும்.

தற்போது 5,313,997 பெண்கள் தொழிலாளர் படையில் இல்லை. அவர்கள் தொழில்படையில் பங்குபற்றுவதற்கு காணப்படும் ஊக்குவிப்பு பற்றாக்குறை பல்வேறு கற்ககைகள் மற்றும் கொள்கை பத்திரங்களின் (குணதிலக 2013, குணவர்தன 2015 ILO 2016, குணதிலக et al. 2017) மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. உலகில் உள்ள பல்வேறு கற்கைகள் பெண்கள் தொழிலில் ஈடுபடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளும் உழைப்பானது அவர்களின் குடும்பம், சமூகம் மற்றும் நாடுகளை செழிப்பாக மாற்றுவதற்கு உதவியுள்ளது என்பதைக் காட்டுகின்றன. அதேவேளை, ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்குபற்றாமையானது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உலகளாவிய இழப்பு மதிப்பிடப்பட்டுள்ளது. ( மக்கென்சி உலகளாவிய நிறுவனம், 2015)

தொழிலாளர் படையில் பங்குபற்றுவதற்கு பல்வேறு தடைகள் இருப்பதற்கான சான்றுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. பழங்காலச் சட்டத்திலிருந்து போதியளவு தொழில்சார் பயிற்சிகள் இல்லமை, சமூக மற்றும் காலாச்சாரக் காரணிகள் பெண்கள் தொழிலாளர் படையில் இணைவதை தீர்மானிப்பதில் உறுதியான பங்கை கொண்டுள்ளமை எனபன அவற்றில் சிலவாகும். இந்த நோக்கத்தை அடைவதற்கு அவசியமான தலையீடுகள் கொண்ட ஐந்து பரப்புகளை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் கீழ் உள்ள குழு அடையாளம் கண்டுள்ளது.

இந்தக் குழு ஹட்டன் ந'னல் வங்கி, பிரதான மனிதவள அலுவலர், சாந்தனி குரேயை தலைமையாகக் கொண்டு கீழ்வரும் அங்கத்தவர்களைக் கொண்டு செயற்படுகின்றது.

| | பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | பேராசிரியர். திலினி குணவர்தன | சிரேஸ்ட விரிவுரையாளர் | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 2 | டாக்டர். நிசா அருணதிலக | பணிப்பாளர் | கொள்கை கற்கைகள் நிறுவனம் |
| 3 | டாக்கடர் ரமணி குணதிலக | சுயாதீன ஆலோசனையாளர் | கொள்கை கற்கைகள் நிறுவனத்தின் முன்னாள் பொருளியலாளர் |
| 4 | திரு.எஸ்.எம்.கோதபாயா ஜயரத்ன | முன்னாள் செயலாளர் | தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சு |
| 5 | திரு. சுனில் அபேவர்தன | அரச செயலாளர் | தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| 6 | திரு.ஜே.பி.எஸ்.ஜயசிங்க | திட்டமிடல் பணிப்பாளர் | பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சு |
| 7 | செல்வி. பத்மினி ரத்நாயக்க | அமைச்சின் ஆலோசகர் | வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சு |
| 8 | பேராசிரியர்.பிரீதி உடகம | சிரேஸ்ட விரிவுரையாளர் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 9 | டாக்டர். பி.டபில்யூ.ஆர்.தமயந்தி | சிரேஸ்ட விரிவுரையாளர் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 10 | திரு.எச்.ஜி.ஜி.ஜே.தர்மசேன | பணிப்பாளர் நாயகம் | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் |
| 11 | திரு.ஏ.விமலவீர | சிரேஸ்ட உதவிச் செயலாளர் | தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சு |
| 12 | திரு.பி.மஹாதேவ | தொழில் ஆணையாளர் | தொழில் திணைக்களம் |
| 13 | திரு.முர்டசா இசுவாலி | குழுமப் பணிப்பாளர் | ஹேமாஸ் குழுமம் |
| 14 | திரு.அர்ஜுன ஹேரத் | சிரேஸ்ட பங்காளர் | ஏர்னஸ்ட் அன்ட் யங் |
| 15 | செல்வி.கயனி த அல்விஸ் | தலைவர் | பண்டப் போக்குவரத்து மற்றும் போக்குவரத்தில் பெண்கள் |
| 16 | செல்வி.அல்கி பெரேரா | பிரதி செயலாளர் நாயகம் | சிலோன் வணிக சம்மேளனம் |
| 17 | செல்வி. அரோசி நாணயக்கார | பிரதம நிறைவேற்று அலுவலர் | குளாபல் கென்சல்டிங் கம்பனி |
| 18 | செல்வி.அயோமி பெர்னாந்து | உதவிப் பணிப்பாளர் நாயகம் | சிலோன் ஊழியர்கள் அமைப்பு |
| 19 | செல்வி.சிறிமல் குரே | முகாமைத்துவப் பணிப்பாளர் | ஜெட்விங் ட்ரவல் / தலைவர், SLID |
| 20 | டாக்டர். ரூகாந்தி த சில்வா | அமைப்பாளர் / பிரதம நிறைவேற்று அலுவலர் | SCM பிளஸ (பிறைவட்) லிமிடட் |
| 21 | செல்வி.எரந்தி பிரேமரத்ன | பொது முகாமையாளர் | மாஸ் |
| 22 | செல்வி.உபுல்கா முனசிங்க | மனித வளத் தலைவர் | ஹேமாஸ் |
| 23 | செல்வி.கத்தரின் வீரக்கொடி | முதலீட்டு ஆய்வாளர் | ஏஜஏ இன்சூரன்ஸ் |
| 24 | பேராசிரியர்.ரங்கிக்கா ஹல்வதுர | சிரேஸ்ட விரிவுரையாளர் | மொரட்டுவ பல்கலைக்கழகம் |

இந்த நோக்கத்தை அடைவதற்கு தலையீடு அவசியமான ஐந்து பிரதான பரப்புகளை இலக்கு குழு அடையாளம் கண்டது:

- ❖ தேசிய கொள்கை மற்றும் தொழில் சட்ட மறுசீரமைப்புகள்
- ❖ அரச மற்றும் தனியார் துறைகளில் மனித வளக் கொள்கை தலையீடுகள்
- ❖ அதிக பெண்களை தனியார் துறையில் உள்ளீர்த்துக்கொள்வதற்கான தலையீடு
- ❖ வெகுஜன ஊடகங்கள் மூலம் பொது விவாதத்தின் ஊடாக சமூக கூருணர்ச்சிப்பாடு
- ❖ கல்வி மறுசீரமைப்பு

மேற்குறிப்பிடப்பட்ட பரப்புகளின் மீது மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் பின்வருமாறு:

**1. தேசிய கொள்கை மற்றும் தொழில் சட்ட மறுசீரமைப்புகள்**

- ❖ ILO-C183 உடன் இணங்கும் வகையில் அரசாங்கத்திற்கும் ஊழியர்களுக்கும் இடையிலான பிரசவ நன்மை ஆகுசெலவினை பங்கிட்டுக்கொள்வதற்கு காப்புறுதி நிதியத்தை நிறுவுதல்.
- ❖ கடைகள் மற்றும் அலுவலக சட்டத்தின் கீழ் உள்ள ''கைத்தொழில் தொழில்முயற்சிகள்'' நிபந்தனையின் பரப்பினை விரிவாக்கல்.
- ❖ பகுதி நேரம், சௌகரியமான நேரங்கள், வீடு மற்றும் மெய்நிகர் பணி ஒழுங்குகள் தொடர்பான உரிமைகள் மற்றும் நன்மைகளை தெளிவாக வரையறுக்க சட்டங்கள்/ திருத்தங்கள்/பிரிவுகளை அறிமுகப்படுத்தல்.

**2. அரச மற்றும் துறைகளில் மனித வள கொள்கை தலையீடுகள்**

- ❖ இலங்கை அரசாங்கம் மற்றும் சிலோன் வர்த்தக சம்மேளனம் மற்றும் சிலோன் ஊழியர்கள் அமைப்பு என்பன புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை கைச்சாத்திடுவதன் ஊடாக அரசாங்க தனியார் சிறந்த நடைமுறை பகிர்ந்தளிப்பு வலையமைப்பினை நிறுவுதல்.
- ❖ பாதிக்கப்பட்ட பெண்களின் களங்கள் மற்றும் சுமைகளைக் குறைத்தல் மற்றும் குறைகளை எழுப்புவதற்கு இசைவான மற்றும் இலகுவான ஊடகத்தை உருவாக்கல்.
- ❖ இலங்கை தனியார்துறை கம்பனிகளில் சமனான கல்விக்கு பால் அடிப்படையிலான சமனான கொடுப்பனவு

**3. அதிக பெண்களை தனியார்துறையில் உள்ளீர்ப்பதற்கு ஊக்குவித்தல்**

- ❖ உட்கட்டமைப்பு வசதிகள், விசேட விடுதிகள் மற்றும் இடை அளவிலான மோட்டார் கோச் வண்டிகளைப் பயன்படுத்தி பெண்களுக்கு மட்டுமான போக்குவரத்து வசதி என்பவற்றை வழங்கல்.
- ❖ தகைமை பெற்ற பெண்கள் வீடுகளில் இருந்து வேலையை வெளியேயிருந்து மேற்கொள்ளும் வகையில் இடைத்தரகராக இடையறா தொழில் மூல கம்பனிகளை உருவாக்கல்.

4. **வெகுஜன ஊடகத்தின் ஊடாக பொது மக்களின் விவாதத்தின் மூலம் சமூக கூருணர்ச்சிப்பாடு.**

- ❖ கல்வி பாடவிதானத்தை மறுசீரமைப்பதை முன்னெடுத்தல். பாடசாலைப் புத்தங்கள் இரட்டை வருமானம் உழைக்கும் குடும்பங்களை அங்கீகரித்தல்.
- ❖ வெகுஜன ஊடகம் - பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள், சினிமா, உரையாடல் நிகழ்ச்சிகள், கட்டுரைகள் போன்றவற்றில் பால் நிலைத்த உள நிலைப்படிவம் மற்றும் அச்சுறுத்தல் பிரச்சினைகள் மற்றும் பணியிடத்தில் பாகுபாடு மற்றும் பணிசெய்யும் பெண்கள் முகம் கொடுக்கும் இரட்டை வேலைப் பிரச்சனை என்பன தொடர்பான கலாச்சரா விழிமியங்களை பேசுதல்.
- ❖ விருது வழங்கும் நிகழ்ச்சிகளில் பெண்களின் முன்மாதிரிகளை காட்சிப்படுத்தவும். உதாரணம்: தேசிய உற்பத்தித்திறன் விருதுகள், சிறந்த கூட்டிணைந்த பிரஜை விருதுகள்.

5. **கல்வி மறுசீரமைப்புகள்.**

- ❖ பல்கலைக்கழகம் மற்றும் துறைக்கு பெண்கள் உள்நுழைவதற்கான அதிக சந்தர்ப்பங்கள். உயர் கல்வியைத் தொடர்வதற்கு கல்விக் கடன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி.
- ❖ நிதியியல் கற்கை, முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ உபாயமார்க்கம் மற்றும் வலையமைப்பு உதவிகள் போன்ற பெண்கள் அணுகாத துறைகளின் திறன மற்றும் வளங்கள் தொடர்பாக பயிற்சியை வழங்குவதற்கு நடமாடும் கல்விப் பிரயோகங்கள்.

இந்த அறிக்கை பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை ‘Young, bold and daring – the spirit of young entrepreneurs for a country enriched.”

எனும் கலந்துரையாடல் மாநாட்டு மற்றும் பயிற்சி செயலமர்வை 02 நவம்பர் மு.ப 8.30 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ஆரம்பித்தது. இந்த மாநாட்டின் நோக்கம், விசேடமாக தொழில்முயற்சித்துறையில் பெண்களக்கு காணப்படும் சந்தர்ப்பங்கள் மற்றும் முகம்கொடுக்கும் சவால்களில் இருந்து மீளுதல் எவ்வாறு என்பது தொடர்பாகவும் விழிப்புணர்வை வழங்கல். மாநாட்டின் பிரதான பேச்சாளராக இந்தியாவின் இளம் வெற்றிகரமான தொழில்முயற்சியாளரான அர்ஜுன ரெட்டி அழைக்கப்பட்டிருந்தார். இவர் ரூபா 100 குரோ வியாபாரமான யுனவேர்சல் ஸ்போட்ஸ்பிட்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தாபகர். ஆசியாவின் ஈ-வணிகம் மற்றும் சில்லறை தொழில்முயற்சியாளர்கள் 30 பேரின் கீழ் போர்ப்ஸ் 30 இன் கீழ் சிறந்த தொழில்முயற்சியாளரினுள் ஒருவராக இவரின் பெயர் பட்டியலிடப்பட்டிருந்தது. இந்தக் குழுவில் இலங்கை கொக்கோ கோலா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சோனு குரோவர், ஸ்பா சிலோன் உப தாபகர் ‘ாலின் பாலசூரிய, டெயிலி எப்டி ஆசிரியர் நிஸ்தார் காசிம், சுற்றுலா மற்றும் இலங்கை ஹொட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் தலைவர் சுனில் திசானாயக்க என்பவர்கள் இருந்ததுடன், இதனை எச்எண்பி பிரதான மனிதவள அலுவலர் சிரந்தி குரோ நடுநிலையாளராக செயற்பட்டார்.

இந்த நிகழ்வின் போது இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு தினே' வீரக்கொடி ''இலங்கையின் தனியார்துறையில் பெண் தொழில்படையில் பங்களிப்பினை அதிகரிப்பதற்கான பாதை வரைபடம்'' மீதான அறிக்கையை பிரதம மந்திரியின் பிரதி பிரதான அலுவலர் மற்றும் முன்னள் அமைச்சர் ரோசி சேனாநாயக்கவிடம் கையளித்தார்.





### 5.2 தொழில்நுட்பத்துறைக்கு திறன்சார் பணியாளர்கள்

இந்த நிகழ்ச்சித்திட்டம் தரவு விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டத்தில் 5 வருடங்களுக்கு மேல் 1000 இளைஞர்களை உருவாக்குவதற்கு ஒத்திசைவான கைத்தொழிற்துறையுடன் இணைந்து நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் வாய்ப்புகளை உருவாக்கல் மற்றும் அடுத்த ஐந்து வருடங்களில் தரவு விஞ்ஞான தொழில்நுட்பத்தில் 1000 இளைஞர்கள் மற்றும் உரிய நிறுவனங்களுடன் அடுத்த ஐந்து வருடத்திற்கு புதிய தரவு விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல்.

இது தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான கைத்தொழில் பிரதிநிதிகளுடன் மூன்று கலந்துரையாடல்கள் 14 செப்டெம்பர், 24 ஒகஸ்ட் மற்றும் 9 ஒகஸ்ட் 2017ம் திகதிகளில் நடாத்தப்பட்டதுடன் கருத்தியல் பத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டது. இந்த கலந்துரையாடல்களில் கிடைக்கப்பெறும் தகவல்கள் பரிமாறப்பட்டதுடன், அறிக்கை தயாரிக்கப்பட்டது.

### 5.3 மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து திரும்புவோரை மீளமைக்க உபாயமார்க்கமொன்றை முன்வைப்பதற்கு பிரதான நலன்விரும்பிகளுடன் ஆலோசனைகளை நடாத்துதல்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து திரும்புவர்களை மீளமைக்க, மீள்திரும்புவோருக்கு சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கு அரச மற்றும் தனியார் நலன்விரும்பிகளுக்கு பயிற்சிகளை வழங்கல்.
வத்தளை நகர மண்டபத்தில் 13 செப்டெம்பர் 2017ம் திகதியும் 21 நவம்பர் 2017ம் திகதி நீர்கொழும்பிலும் இரண்டு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தொழில் ஊக்குவிப்பு, தொழில்பயிற்சி மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை பலப்படுத்தல்.

#### 5.3.1 வத்தளையில் தொழில் சந்தை மற்றும் தொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் ‘‘எதிர்காலத்திற்கு தயாரான தொழில்படை’’ எனும் தொலைநோக்கின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் உள்ள பாடசாலையை விட்டு நீங்கியவர்களுக்கான இரண்டாவது தொழில் விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குசெய்யப்பட்டது. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பவற்றுடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. கலந்துரையாடலின் பின்னர் இலங்கையில் உயர் இடப்பெயர்வு நிகழும் நான்கு மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டன. அவை குருநாகல், கம்பஹா, மட்டக்களப்பு மற்றும் புத்தளம் மாவட்டங்கள் ஆகும். தரவுகளைச் சேகரிக்கும் பணிகளில் ஏற்பட்ட சிரமம் காரணமாக நாங்கள் கம்பஹா மாவட்டத்தை ஒதுக்கினோம். நாங்கள் வத்தளை பிரதேச செயலகத்திற்கும் மற்றும் கம்பஹா மாவட்டத்திற்கும் இரு நிகழ்ச்சிகளை வடிவமைத்தோம்.

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை முதலாவது விழிப்புணர் பிரச்சார நிகழ்ச்சியை வத்தளையில் நடாத்தியது. இதன் போது தொழில் தேடுபவர்கள், தொழில்கல்வி பயிற்சிக் கல்வி மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து திரும்பியவர்கள் இலக்காக கொள்ளப்பட்டனர். இதில் வத்தளை பிரதேச செயலக, ஜா-எல பிரதேச செயலக மற்றும் மகர பிரதேச செயலகத்தை சேர்ந்தவர்கள் பங்குபற்றினர். முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தில் தஸ்மா இன்டர்நசனல், எயிட்கன்ஸ் ஸ்பென்ஸ், ஹேலிஸ் பிரைவட் லிமிடட், மாஸ் ஹோல்டிங்ஸ், லீடர் ட்ரவல் அன்ட் டுவர்ஸ், ஆர்பிகோ பிறைவட் லிமிடட்,சஹரித பிளான்டேசன் போன்ற தனியார் துறையைச் சோந்த கம்பனிகள் பங்குபற்றின. VTA, NAITA மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி பிரிவு பிரதிநிதிகள் அவர்களுடைய சந்தர்ப்பங்களை விளக்கியதுடன், தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தெளிவுபடுத்தினர்.

திரு தனுக சிறினம ஊக்குவிப்பு பேச்சாளராவதுடன், இவர் அனேக உள்ர் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்சிகளில் பங்குபற்றியுள்ளதுடன் அனேப தனியார் கம்பனிகளுக்கு

ஆலொசனைகளை வழங்கியுள்ளார். அவர் மிகச்சிறந்த தொழில் ஊக்குவிப்பு உரையொன்றையாற்றினார். சுற்றால அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சின் தனிப்பட்ட செயலாளர் நிகழ்ச்சியினை சிறப்பித்தார். திரு மஞ்சுள (பணிப்பாளர் - TVEC) மூன்றாம் நிலை தொழில்கல்வி மற்றும் கல்வி நிகழ்ச்சியினை வழங்கினார். இந்த நிகழ்வில் 300 பெண்கள் பங்குபற்றினர். இந்த நிகழச்சி 13 ஒகஸ்ட் 2017 வத்தளை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.





### 5.3.2 நீர்கொழும்பில் தொழில் சந்தை மற்றும் தொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்.

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை, கைத்தொழிற்துறையிலும் கம்பனிகளிலும் கிடைக்கப்பெறும் தொழில்வாய்ப்புகள் தொடர்பாகவும் அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள பயிற்சி நிறுவனங்களில் காணப்படும் திற்ன பயிற்சி பாடநெறிகள் தொடர்பாகவும் பாடசாலையை விட்டு நீங்கியவர்கள் அறிந்துகொள்வதற்காக இரண்டாவது விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சியை நீர்கொழும்பில் நடாத்தியது. இதன் போது கைத்தொழிற்துறை ஊழியர்களுக்கு பாடசாலையை விட்டு நீங்கிய மாணவர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்துவதற்கும், இளைஞர்களுக்கு அறிவூட்டுவதற்கும், கைத்தொழிற்துறை ஊழியர்களுடன் வலையையமைப்பினை பாடசாலையை விட்டு நீங்கிய இளைஞர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை இரண்டாவது விழிப்புணர் பிரச்சார நிகழ்ச்சியை நீர்கொழும்பில் நடாத்தியது. இதன் போது 2016ம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றி பாடசாலையை விட்டு நீங்கியவர்கள், தொழில்கல்வி பயிற்சிக் கல்வி மற்றும் மத்தியகிழக்கில் இருந்து திரும்பியவர்கள் இலக்காக கொள்ளப்பட்டனர். இதற்கு நீர்கொழும்பு, மினுவாங்கொட, கந்தானை, கம்பஹா, வத்தளை, மஹர மற்றும் ஜாஎல பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் சமூகமளித்தனர். தொழில் சந்தையின் நோக்கம் நிறுவனங்கள் உத்தேச ஊழியர்களை முறைசார முறைமையில் கண்டறிதல் ஆகும். அத்துடன் தொழில் சந்தை தொழில் தேடுபவர்களுக்கு உத்தேச தொழில் வழங்குனர்களையும் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தையும் வழங்குவதாகும். இதன் போது கம்பனிகள், தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழில் தேடுநர்கள் தகவல்களை பரிமாறிக்கொள்வதில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த வகையில் பல்வேறுபட்ட கம்பனிகள் ஒரே

இடத்தில் தொழில் வாய்ப்பு சந்தர்ப்பங்களை வெளிப்படுத்த முடிந்தது. தொழில் சந்தை கூட்டிணைந்த உள்ளகபயிற்சி, தொழில் வாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டி தகவல் என்பவற்றை இளைஞர்கள் அணுகுவதற்கு வழிவகுத்தலை நோக்காகக் கொண்டிருந்ததுடன் இளைஞர்களுக்கும் கம்பனிக்கும் இடையில் உறவினைக் கட்டியெழுப்புவதற்கு சந்தர்ப்பத்தையும் வழங்கியது.

இந்த நிகழ்வுகளை தொகுப்பதன் நோக்கம் இந்த நிகழ்வானது ஆட்சேர்ப்பு மற்றும் வேலைவாய்ப்பு வெற்றிகளைப் பெறுவதில் நிறுவனங்களுக்கும் இளைஞர்களுக்கும் உதவுவதாகும். இந்த இளைஞர்களின் திறமையும் நம்பிக்கையும் கம்பனிகளின் நிலைக்கு கோரும் கேள்விகளைப் பூர்த்திசெய்யும். இந்த நிகழ்வில் பங்குபற்றவதற்கு தொழில்புரிவோருக்கு சந்தர்ப்பம் கிடையாது.

இந்த நிகழ்வில் 700 மாணவர்கள் பங்குபற்றினர். இந்த கைத்தொழில் தொழில் சந்தை 21 நவம்பர் 2017ம் திகதி நீர்கொழும்பு மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கம்பஹா மாவட்ட மாவட்டச் செயலாளர் பங்குபற்றியவர்களுக்கு ஊக்க உரையை வழங்கினார். அத்துடன் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் ஒருங்கிணைப்பு மற்றும் பணிகளையும் ஊக்குவித்தார். இலங்கையில் வளரும் கைத்தொழிற்துறையில் காணப்படும் திறன் இடைவெளி மற்றும் தொழில்வாய்ப்புகள் குறித்து உரையாற்றிய நகரசபை ஆணையாளர், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் நாடளாவிய கருத்திட்டங்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

ஊக்குவிப்பு பேச்சாளரான திரு தம்மிக்க சிறினமான ஊக்குவிப்பு தொடரை நடாத்தினார். அவர் ''ஏன் இளைஞர்கள் தொழிலைத் தேடுகின்றனர்'', ''ஏன் எங்களுக்கு தொழில் வேண்டும்'', ''எவ்வாறு தொழிலைப் பெற்றுக்கொள்வது'', ''தனியார் கம்பனிகளினதும் தொழில்வழங்குனரினதும் தேவைகள் என்ன'' என்பதை விளக்கினார். அனேக பங்குபற்றுனர்கள் தொழில் குறித்த எண்ணக்கருக்களைப் பெற்றுக்கொண்டனர். அவர் தனியார் துறை தொழிலுக்கான பாதையை விளக்கினார்.

செல்வி. சந்திமா ரெட்ரிகோ (திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயற்சி அமைச்சின் தொழில் வழிகாட்டல் அலுவலர்) இளைஞர்கள் மற்றும் மீண்டும் வந்தவர்களுக்கான தொழில் பயற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சந்தர்பங்கள் குறித்து உரையாற்றினார். செல்வி சுமுது பாகொட (பணிப்பாளர் – தொழிற்பாட்டு – சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்கியல்) அவர்களுடைய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பாடநெறிகள் பற்றி விளக்கினார்.

இந்த நிகழ்வில் வேறுபட்ட இலக்கு குழுக்களைக் கொண்ட 800 பங்குபற்றினர். இங்கு 23 தனியார் கம்பனிகளும் VTA, NAITA, DTET, NYSC, SLITHM மற்றும் CMA போன்ற பயிற்சி நிறுவனங்களும் பங்குபற்றின. ஏட்கன் ஸ்பென்ஸ், எம்பிஎல் குழுமம், எம் டொனால்ட்ஸ், ஹைட்ராமணி, மாஸ் ஹோல்டிங்ஸ், பொலிடெக்ஸ் கார்மன்ட், யூனியன் அசூரன்ஸ், கோகு லங்கா பிறைவட் லிமிடட், சிஜபி, ஆர்ப்பிகோ போன்றன சில கம்பனிகளாகும். இங்கு வேறுபட்ட கைத்தொழிற்துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்குபற்றியதுடன் அவர்கள் வெற்றிடங்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து காட்சிப்படுத்தினர். பிரதானமாக ஆடைக் கைத்தொழிற்துறை, புடவை, உணவு மற்றும் உணவு விடுதிகள், தயாரிப்பு கைத்தொழிற்துறை, காப்புறுதி கைத்தொழிற்துறை, பெருந்தோட்டக்

கைத்தொழிற்துறை, மனித வளம், சுற்றுலா மற்றும் ஹொட்டல் கைத்தொழிற்துறை, நிர்மாணிப்பு மற்றும் ஓட்டோ மொபைல் போன்றன சிலவாகும்.
இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை இந்த நிகழ்ச்சியை கம்பஹா மாவட்டச் செயலகம், திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயற்சி அமைச்சு, தொழில் சங்க போரவை, தேசிய வணிக சம்மேளனம், சிலோன் வணிக சம்மேளனம், தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் உள்ள அரச மற்றும் தனியார் வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிறுவனங்கள் என்பவற்றின் கூட்டிணைப்புடன் ஒழுங்குசெய்தது.




| | கம்பனி / நிறுவனத்தின் பெயர் | கிடைக்கப்பெறும் வெற்றிடங்கள் | நேர்முகத் தேர்வு மேற்கொள்ளப்பட்ட பங்குபற்றுனர்கள் |
|---|---|---|---|
| 01 | சீஜபி சொப்பிங் சென்டர்-நீர்கொழும்பு | 20 | 38 |
| 02 | திருண்டி ஸ்ரீட் பிறைவட் லிமிடட் | 40 | 15 |
| 03 | மரிடைம் பிளேஸ்மன்ட் | 160 | 28 |
| 04 | அசூரன்ஸ் | 50 | 50 |
| 05 | டீசல் மோட்டார் எஞ்சினியரிங் பிஎல்சி | 10 | 0 |
| 06 | ஆர்ப்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி | 20 | 77 |
| 07 | கொஹோகு லங்கா (பிறைவட்) லிமிடட் | 100 | 18 |
| 08 | மக் டொனால்ட்ஸ் | 30 | 28 |
| 09 | எய்கன் ஸ்பென்ஸ் | 50-70 | 02 |
| 10 | சஹரித பிளான்டேசன்ஸ் | 35 | 30 |
| 11 | சித்தாலேப | 08 | 03 |
| 12 | லங்கா கார்மன்ட் | 30 | 0 |
| 13 | ஸ்மார்ட் சேட்ஸ் | 200 | 0 |

| | | | |
|---|---|---|---|
| 14 | பிரான்டிக்ஸ் | 50 | 0 |
| 15 | ஹைட்ராமணி மேகூரி அப்பரல் - கட்டுநாயக்க | 35 | 02 |
| 16 | மொவுன்டா புரடக்ட் (பிறைவட்) லிமிடட் | 25 | 17 |
| 17 | சென்வெக் லங்கா (பிறைவட்) லிமிடட் | 10 | 20 |
| 18 | ஹலன்ட் பைல்ஸ் ஸ்ரீலங்கா (பிறைவட்) லிமிடட் | 50 | 25 |
| 19 | ட்ரன்ரிக் ட்ரெயிலர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 100 | 7 |
| 20 | செல்கோ கென்டினென்டல் (பிறைவட்) லிமிடட் | 100 | 40 |
| 21 | யுனிவேர்சல் கொலிட்ஜ் ஒப் லேர்னிங் | 500 | 35 |
| 22 | நோர்த் மனியுபக்சரிங் (பிறைவட்) லிமிடட் | 20 | 5 |
| 23 | ஆர்ப்பிக்கோ சுப்பர் ( ரிச்சர்ட் பீரிஸ்) | 100 | 60 |
| 24 | ஓடெல் பிஎல்சி (செவ்ட்லொஜிக்) | 50 | 20 |
| 25 | VTA (பயிற்சி) | 350 | 14 |
| 26 | டல் டெக்டைல்ஸ் இன்டஸ்ரீஸ் (பிறைவட்) லிமிடட் | 50 | 30 |
| 27 | CMA இன்ரிடியூட் கொழும்பு 04 | | 2 |
| 28 | ஒகாயா லங்கா | 100 | 40 |
| 29 | வாழ்க்கை தொழில் பயிற்சி அதிகாரசபை | 15 | 15 |
| 30 | ஹைட்ராமணி டெக்டைல்ஸ் (பிறைவட்) லிமிடட் | 40 | 30 |
| 31 | பெலிடெகஸ் கார்மன்ட் லிமிடட் | | 23 |
| 32 | ஹெட்டிகொட குரூப் (பிறைவட்) லிமிடட் | | 10 |
| 33 | தொழில்வலு மற்றும் தொழில்வாய்ப்புத் திணைக்களம் | 100 | அவர்களுடைய தரவுகளை பதிவுசெய்தனர் |
| 34 | NAITA – கம்பஹா | பயிற்சிக்கு | 12 |

## 5.4 TVEC உடன் இணைந்து NVQ முறைமை ஊடாக TVET துறை தரத்தினை மேம்படுத்தல்

பிரதம மந்திரி, இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையை குறுகிய கால எதிர்காலத்திற்கான சுற்றுலாத் தொழிற்துறை ஊழியர்களின் தேவைகளை மதிப்பீடு செய்ய பணியமர்த்தியுள்ளதுடன், அதே நேரத்தில் நாட்டிலுள்ள சுற்றுலாத்துறையின் அனைத்து வசதிகளையும் மதிப்பீடு செய்தல் மற்றும் பயிற்சி இடைவெளிகளைக் குறைக்கும் பணியையும் இலக்காக வழங்கியுள்ளார்.

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் தலைவரான திரு தினேஸ் வீரக்கொடியின் பணிப்புரையின் கீழ், இரு குழுக்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், ஒன்று மதிப்பீடு செய்வதற்கும் மற்றையது இலங்கையின் வளரும் சுற்றுலாத்துறை இலக்குகளை அடைவதற்கு பயிற்சி பெற்ற ஊழியர்களுக்கான உண்மையான கேள்வியை எதிர்வுகூறுவதற்குமாகும். இலங்கையின் அனைத்து சுற்றுலா பயிற்சி நிறுவனங்களின் தரம் மற்றும் நியமத்தை தீர்மானிப்பதற்க முதலாவதற்கு

தலைவராக திரு சிறிலால் மித்தபாலவும் இரண்டாவதற்கு தலைவராக திரு சுனில் திசாயக்கவும் இருக்கின்றனர்.

இந்த இருக்குழுக்களினதும் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் திரு சந்திரா எம்புல்தெனியவினால் அறிக்கை தயாரிக்கப்பட்டு அதற்கு "Tourism Industry forecast 2016-2020" எனப் பெயரிடப்பட்டதுடன், பிரதம மந்திரிக்கு கையளிப்பதற்காக இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை, இந்த அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான செயற்பாட்டுத் திட்டங்களை பின்வருமாறு உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளது.

- சுற்றுலாக் கைத்தொழிற்துறைக்கு இணைத்துக் கொள்வதற்கு இளைஞர்களை கவரும் வகையில் முன்னிலைப்படுத்தப்பட்ட தெளிவான செயற்பாட்டுத்திட்டத்தினைத் தயாரித்தல்.
- கைத்தொழிற்றைக்கு புதிய ஊழியர்களுக்கான கேள்வியை சந்திக்கும் வகையில் விருப்பத்திற்குரிய மட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தியை எவ்வாறு அடைவது என்பதற்கான திட்டத்தை தயாரித்தல்.

இரு செயற்பாட்டுக் குழுக்கள் நிறுவப்பட்டதுடன் ஒன்று திரு மனோ சேகரத்தினாலும், மற்றயது திரு சந்திரா மொஹோட்டியினாலும் தலைமை தாங்கப்படுகின்றது.
இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் ;

- நெருக்கடியான வளர்ச்சி கைத்தொழிற்துறைக்கு திறமையான வழங்கலை அதிகரித்தல்.
- இரண்டு சுற்றுலா இலக்குப் படைகளை உருவாக்குதல் மற்றும் கைத்தொழிற்துறை நிபுணர்களின் கருத்துக்கள், பரிந்துரைகள் மற்றும் உள்ளீடுகளை பகுப்பாய்வு செய்தல்.
- சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சுக்கு கையளிப்பதற்கு முன்மொழிவை அபிவிருத்தி செய்தல்.

திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சு என்பன சுற்றுலாவிற்கான திறன் சபையை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த சபையானது முழுமையாக தொழிற்படுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்படுவதால், திறமை சபை சுற்றுலா மற்றும் விருந்தொம்பல் ஆகியவற்றில் பணியாற்றும் நபர்கள் திறைமையுள்ளவர்களாகவும்ஈ தங்கள் நிபுணத்துவத்தின் பயன்பாட்டின் மூலம், ஒரு நிலையான, உற்பத்தித்திற் மிக்க மற்றும் இலாபகரமான சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் தொழில் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்யும். எனினும், முன்மொழியப்பட்ட தலையீடானது, கைத்தொழிற்துறை, பயிற்சி வழங்குனர்கள் மற்றும் அரசாங்கம் என்பன இணைந்து தொழிற்படலை வேண்டி நிற்கின்றது. இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறையின் ஊடாக மட்டுமே நாங்கள் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கைத்தொழிற்துறையானது சரியான நபர்களை அவர்களின் சரியான திறனுடன் சரியான நேரத்தில் அணுக முடியும்.
சுற்றுலா, பயணம் மற்றும் விருந்தோம்பல் துறையின் முன்னோடியில்லாத வளர்ச்சி காரணமாக திறன் மற்றும் தகுதிவாய்ந்த ஊழியர்களின் பற்றகைக்குறை காரணப்படுகின்றது. எதிர்கால

தொழில்படைக்கான தொழில்வாய்ப்பு எதிர்வுகூறல் இந்த ஒழுங்கு தொடரும் என்பமை பலமாக சுட்டிக்காட்டுகின்றது. இந்த கைத்தொழிற்துறையின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு வருகையாளர்களின் எதிர்பார்ப்பு தரத்தினை அடைவதற்கு ஏற்றவகையில் உற்பத்தி திறன் மிக்க, நிலையான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு உரிய வகையிலான திறன் மிக்க ஊழியர்களை அணுகுவதற்கு கைத்தொழிற்துறைக்கு இயலுமாகும் வகையில் தொழில்வலுத் திட்டமிடல் அமைதல் வேண்டும். சுற்றுலாத்துறைக்கான 2020ம் ஆண்டுக்கான பயிற்சி உள்ளீர்ப்பு அண்ணளவாக 32,793 என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், வருடாந்த இயலளவு 8,599 ஆகவே உள்ளது.

இந்த இடைவெளியானது குறைந்தபட்சம் பிரந்திய நியமங்களுக்கு பொருந்தும் வகையில் பயிற்சி நிறுவனங்கள் அல்லது புதிய நிறுவனங்களினால் பதிவுசெய்வதன் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும். இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் வெளியீடு 2016ம் ஆண்டு 5178 மற்றும் 2017இல் 8000 ஆக இருந்தது. உடனடியான கவனத்திற்கு கொண்டு வர வேண்டிய பரப்புகளான விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல், ஹொட்டல் நிதி, மற்றும் பெறுகை போன்றன விருந்தோம்பல் பாடவிதானத்தில் உள்ளடக்கப்படாததனால் பயிற்சி பெறுபவர்கள் அத்துறைகளில் தேர்ச்சி பெறுவதற்கு முகாமைத்துவ திறமையுடன் புதிய அறிமுகங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். சுற்றுலா, பயணம் மற்றும் விருந்தோம்பல் தகைமைகளின் மிக மந்தமான பூர்த்திசெய்தல் வீதமானது கைத்தொழிற்துறைக்கு நீண்ட பிரச்சனையாக அமைந்துள்ளது, ஆனால் இந்த நிலமையை மேம்படுத்துவதற்கு வாழ்க்கை தொழில் கல்வி மற்றும் பயிற்சி முறையின் ஊடாக பல புதிய முன்னெடுப்புகளுடன் ஒன்றிணைந்து தொழிற்படல் வேண்டும்.

**இந்தக் குழு கீழ்வருவன தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு குறித்துரைத்த விதப்புரைகளை கட்டாயப்படுத்தியுள்ளது.**

- ❖ சுற்றுலாத்துறையில் உடனடி திறன் கேள்வியை சந்திப்பதற்கு உடனடியான கற்கை மற்றும் அபிவிருத்தி தலையீடுகளை பூர்த்திசெய்தல் வேண்டும்.
- ❖ சுற்றலா, பயணம் மற்றும் விருந்தோம்பல் கைத்தொழிற்துறையில் பணிபுரியும் நபர்கள், சுற்றுலாப் பயணிகளுக்கு தரமான அனுபவத்தை வழங்குவதற்கு பொருத்தமான திறன்கள் மற்றும் ஆளுமைகளை கொண்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு மனிதவளத் தலையீடுகளை மேற்கொள்வதற்கும் மற்றும் தற்போதும் மற்றும் எதிர்காலத்திலும் கைத்தொழிற்துறைக்கு அவசியமான திறன் மற்றும் அறிவினை வழங்கும் வகையில் கல்வி மற்றும் பயிற்சி முறைமையை மீளநிறுவுவதற்கும் விதப்புரை செய்தல்.

கீழ்வரும் மூன்று முக்கிய தூண்களை பூர்த்திசெய்வதற்கு அமுல்படுத்தவதற்கான அளவிடக்கூடிய செயற்பாடுகளை வழங்கும் வகையில் பத்திரமானது பரந்தவகையில் முயற்சியெடுத்தள்ளது.

- ❖ திறன்சார் தொழில்படை வழங்கல(அவசியமான எண்ணிக்கையில் கைத்தொழிற்துறையானது பொருத்தமான திறனுள்ள நபர்களை அணுகக்கூடியதாக இருத்தல்)
- ❖ இயலளவு கட்டியெழுப்பல் (திறன்கள், தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றை மேம்படுத்தவதன் ஊடாக உற்பத்திதிறனை அதிகரித்தல்)

❖ தரம்சார் பிரச்சினைகள் (தரமான வழங்கல் மற்றும் மதிப்பீட்டினை மேம்படுத்துவதன் ஊடாக தரமான திறன் வெளிப்பாட்டினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள்)

இந்த அறிக்கையானது திரு மனோ சேகரம் அவர்களின் தலைமையின் கீழ் செயற்பட்ட கீழ்வரும் நபர்களை உள்ளடக்கிய குழு 1 இன் கண்டுபிடிப்புகளையும் விவாதங்களையும் சுருக்கமாக கொண்டுள்ளது

**பணிக்குழு : 01 தலைவர்: திரு மனோ சேகரம் மற்றும் குழு அங்கத்தவர்கள்**

| இல | பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | திரு.மனோ சேகரம் | பிரதான நிறைவேற்று அலுவலர் | 99x தொழில்நுட்பம் |
| 2 | திரு.கிரன் செனோய் | பிரதான நிறைவேற்று அலுவலர் | டொபான் போர்ம்ஸ் |
| 3 | திருமதி.அமல் குணதிலக | ஆலோசனையாளர் | விருந்தோம்பல் சந்தைப்படுத்தல் |
| 4 | திரு.காஞ்சனா நாணயக்கார | மனிதவளத் தலைவர் | ஜெட்விங் |
| 5 | திரு.மாலிங்க | பொது முகாமையாளர் | ஹேமாஸ் லொசர் |
| 6 | திரு.எஸ்.முரளிதரன் | பிரதான நிறைவேற்று அலுவலர் / பொது முகாமையாளர் | சம்பத் ஐடி சொலுசன்ஸ் |
| 7 | திரு.திமோதி எட்வேர்ட் | MPSR | WUSC |
| 8 | திரு.சுஜீவ குரே | உப தலைவர் / மனிதவளத் தலைவர் | சினமன் ஹொட்டல்ஸ் |
| 9 | திரு. பத்ம லினகே | MSRP | ஹேலிஸ் |
| 10 | திரு.சுரேச முருகேசர் | ஆலோசனையாளர் | டிவியன்சி கன்சல்டிங் |
| 11 | திரு.லலிதாதீர | பணிப்பாளர் | NHRDC |
| 12 | திரு.எஸ்.தணிகசீலன் | உதவிப் பணிப்பாளர் | NHRDC |
| 13 | திரு.சிறிலால் மித்தபால | ஆலோசனையாளர் | |
| 14 | திருமதி.இசாரா நுவால் | | சினமன் ஹொட்டல்ஸ் |
| 15 | திரு. இ'ான் தந்தநாராயண | பிரதான நிறைவேற்று அலுவலர் | பிரான்டிக்ஸ் |
| 16 | திரு.சஞ்சீவ விஜேசிங்க | மனித வளப் பணிப்பாளர் | ஹேமாஸ் |
| 17 | திரு.தீப்தி லமாஹேவா | DPD | WUSC |
| 18 | திரு.அன்டன்.குட்விரே | | |

**பணிக்குழு : 01 தலைவர்: திரு சந்திரா மொஹோட்டி மற்றும் குழு அங்கத்தவர்கள்**

| இல | பெயர் | பதவி | குழுப் பதவி |
|---|---|---|---|
| 1 | திரு.சந்திரா மொஹோட்டி | தலைவர் – TVEC துறைச் சபை ( சுற்றுலா) | தலைவர் |
| 2 | பேராசிரியர் ரஜீவ் விஜேசிங்க | தலைவர் – TVEC | அங்கத்தவர் |
| 3 | டாக்டர் சந்ரா அம்புல்தெனிய | NHRDC சபை அங்கத்தவர் | அங்கத்தவர் |
| 4 | பொறி.டாக்டர்.லியனல் பின்டோ | தலைவர் – VTA | அங்கத்தவர் |
| 5 | திரு.புத்திக காரியவசம் | பணிப்பாளர் நாயகம்–SLITHM | அங்கத்தவர் |
| 6 | திரு.பிரபூத் குலதுங்க | பிரதிப் பணிப்பாளர் நாயகம –SLITHM | அங்கத்தவர் |
| 7 | திரு.ரவீந்ர மாகெதர | அதிபர் – மவுன்ட்லவெனியா ஹொட்டலின் சர்வதேச ஹொட்டல் | அங்கத்தவர் |
| 8 | திரு.ஆர்.பண்டிதகோரலாகே | பணிப்பாளர் / பிரதான மனித வள அலுலவலர், ஏட்கன் ஸ்பென்ஸ். | அங்கத்தவர் |
| 9 | திரு. மிலிந்த ஹெட்டியாராச்சி | வருகை விரிவுரையாளர் விருந்தோம்பல் பீடம் / அக்குயுனாஸ் கொலிஜ் ஒப் ஹயர் ஸ்டடிஸ், ஹொட்டல் ஆலோசனையாளர், வருகை விரிவுரையாளர் மற்றும் பிராந்திய கல்வி ஆலோசனையாளர்/ லூர்சன் பல்கலைக்கழகம், சிறிப்பு விரிவுரையாளர்/ கொழும்பு பல்கலைக்கழக வியாபார பீடம். | அங்கத்தவர் |
| 10 | திரு.சி.விதானபத்திரன | உதவிப் பணிப்பாளர் -VTA | அங்கத்தவர் |
| 11 | திரு.சுனில் திசாநாயக்க | தலைவர் -SLITHM | அங்கத்தவர் |
| 12 | செல்லி.சராச் சமோன் | SCG குழுமம், Global Mobility specialist – திறமை முகாமைத்துவம் | அங்கத்தவர் |
| 13 | திரு.கே.ஏ.லலிததீர | பணிப்பாளர் | NHRDC |
| 14 | திரு.எஸ்.தணிகசீலன | உதவி பணிப்பாளர் | NHRDC |





## 5.5 கைத்தொழிற்துறைக்கு முச்சக்கர வண்டி சாரதிகளை மறுசீரமைப்பதற்கு CSC அங்கீகாரமளிக்கப்பட்ட உபாயமார்க்கத்தை அமுல்படுத்தல்

இந்தக் கருத்திட்டத்தின் நோக்கம், சிக்கலான வளரும் கைத்தொழிற்துறைக்கு திறமையான வழங்கலை அதிகரித்தல் ஆகும். கலந்துரையாடல்கள் EFC, SLTDA, தேசிய வணிக சம்மேளனம், முச்சக்கர வாகன சங்கம் மற்றும் TVEC உடன் மேற்கொள்ளப்பட்டன. TVEC வினால் பொலிஸ் பயிற்சிப் பாடசாலை, ஹொட்டல் கைத்தொழிற்துறை, TVEC, NAITA மற்றும் SLITHM. துறை கவுன்சில் என்பவற்றின் ஒத்துழைப்புடன் ''சுற்றுலாப் பயணிகளுக்கான டக்சி சாரதி'' மீது மாதிரி அபிவிருத்தி செய்யப்பட்டது.

**முச்சக்கரவண்டிச் சாரதிகளை கைத்தொழிற்துறைக்கு மறுசீரமைப்பதற்கு அவசியமான உபாயமார்க்கங்களை அடையாளம் காணும் ஆய்வு நடாத்தப்பட்டது.**

**இந்த ஆய்வின் நோக்கம்**

- முச்சக்கர வண்டி சாரதிகளின் சமூக-பொருளாதார நிலையை அடையாளம் காணல
- அவசியமான திறன் பயிற்சித் தேவையை அடையாளம் காணல்
- போக்குவரத்து சேவைக்கு மாற்று சேவையை அடையாளம் காணல்
- வளரும் கைத்தொழிற்துறைக்கு முச்சக்கர வண்டி சாரதிகளை மறுசீரமைப்பதற்கான உபாயமார்க்கத்தை அபிவிருத்தி செய்தல்.

இந்த ஆய்வு கொழும்பு, கம்பஹா, பதுளை, குருநாகல், இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களில் தேசிய மனிதவள அபிவிருத்தி சபை ஊழியர்களின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டது. முன்வரைவு இறுதி அறிக்கையும் தரவு வெளிப்படுத்துகையும் 2017ம் ஆண்டு நவம்பர் மாத இறுதியில் பூர்த்திசெய்யப்பட்டது.





## 5.6 அரச சேவை ஊழியர்களுக்கு வெளிநாட்டு பயற்சிகளை வழங்குதல் - 2017

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் ‘‘எதிர்காலத்திற்கு தயாரான தொழில்படை’’ எனும் தொலைநோக்கின் கீழ் அரச சேவை ஊழியர்களுக்கான பல வெற்றிகரமான நிகழ்ச்சிகள் 2017ம் ஆண்டு நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் அரசாங்க ஊழியர்களின் பணி சார்ந்த தகைமை மற்றம் தனிப்பட்ட வளர்ச்சியை அதிகரித்தல் ஆகும்.

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையினால் 2017ம் ஆண்டு எட்டு வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை பொது அரச முகாமைத்துவ ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், பல்கலைக்கழக நிர்வாக ஊழியர்கள் மற்றும் பல்கலைக்கழக தொழில்நுட்ப ஊழியர்கள் போன்ற வேறுபட்ட இலக்கு குழக்களுக்கு அறிமுகப்படுத்த முடிந்தது. அந்த எட்டு நிகழ்ச்சித்திட்டங்களும் பின்வருமாறு.

### 5.6.1. முகாமைத்துவ இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மேற்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் மூன்று நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது அரசாங்கத்துறையின் மத்திய மற்றும் உயர் வகுப்பு முகாமைத்துவ அலுவலர்களை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. ஒவ்வொரு நிகழ்ச்சியும் 4 நாட்களைக் கொண்ட உள்ளூர் பயிற்சியாக மேற்கொள்ளப்பட்டது. உள்ளூர் வளநபர்களாக திரு ரனில் சுகததாச, டாக்டர் கசுன் நந்தபால மற்றும் திரு சாமிர உடவத்த கலந்துகொண்டனர். மூன்று நிகழ்ச்சிகளின் விபரங்கள் பின்வருமாறு:

**முகாமைத்துவ இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் III**

உள்ளூர் தொடர்கள் 20 ஏப்பிரல் 2017 இருந்து 23 ஏப்பிரல் 2017 வரை இலஙகை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெற்றதுடன் வெளிநாட்டுத் தொடர் 30 ஏப்பிரல் 2017 இருந்து 06 மே 2017 வரை மலேசியாவின் புத்ர பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில் 28 அலுவலர்கள் பங்குபற்றினர்.

**முகாமைத்துவ இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் IV**

உள்ளூர் தொடர்கள் 31 ஓகஸ்ட் 2017, 01, 07 மற்றும் செப்டெம்பர் 2017 ம் திகதிகளில் நிதியியல் கல்வி நிலையமான மிலோதாவில் நடைபெற்றதுடன் வெளிநாட்டுத் தொடர் 17 இருந்து 23 செப்டெம்பர் வரை மலேசியாவின் புத்ர பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில் 21 அலுவலர்கள் பங்குபற்றினர்.

**முகாமைத்துவ இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் V**

உள்ளூர் தொடர்கள் 14,15, 21 மற்றும் 22 செப்டெம்பர் 2017ம் திகதிகளில் நிதியியல் கல்வி நிலையமான மிலோதாவில் நடைபெற்றதுடன் வெளிநாட்டுத் தொடர் 1இருந்து 7 ஒக்டோபர் வரை மலேசியாவின் புத்ர பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில் 20 அலுவலர்கள் பங்குபற்றினர்.







**5.6.2. பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம் மீதான தலைமைத்துவ நிகழ்சித்திட்டங்கள்**

இந்த நிகழ்ச்சித்திட்டம் கல்வி அமைச்சின் விசேட வேண்டுகோளுக்கு அமைவாக ஒழுங்குசெய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்ட தலைப்பின் கீழ் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திலும் 30 பங்குதாரர்களை உள்ளடக்கி இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நாங்கள் நடாத்தினோம். இதன் போது இலக்கு குழுக்களாக பாடசாலை அதிபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம் மீதான தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களின் இரண்டினதும் விபரங்கள் கீழ்வருமாறு:

பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம் மீதான தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் 1 – நிகழ்ச்சித்திட்டம் 8 – 15 நவம்பர் 2017 வரை நடைபெற்றது.

பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம் மீதான தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் 11 – நிகழ்ச்சித்திட்டம் 15 – 22 நவம்பர் 2017 வரை நடைபெற்றது.

### 5.6.3. தொழில்நுட்ப அலுவலர்களுக்கான தகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மேற்குறித்த தலைப்பின் கீழ் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நாங்கள் நடாத்தினோம். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கு குழுக்களாக பல்கலைக்கழக தொழில்நுட்ப ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இரு நிகழ்ச்சித்திட்டங்களினதும் விபரங்கள் கீழ்வருமாறு:

தொழில்நுட்ப அலுவலர்களுக்கான தகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் I – பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை – 26

இந்த நிகழ்ச்சித்திட்டம் 9 ஜுலை இருந்து 15 ஜுலை 2017 வரை நடைபெற்றது.

தொழில்நுட்ப அலுவலர்களுக்கான தகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் II – பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை – 28

இந்த நிகழ்ச்சித்திட்டம் 22 ஒக்டோபர் 2017 இருந்து 28 ஒக்டோபர் 2017 வரை நடைபெற்றது.





### 5.6.4. முகாமைத்துவ மற்றும் நிர்வாக தகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டம் 12 பெப்பரவரி இருந்து 18 பெப்பரவரி 2017 வரை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குக் குழு பல்கலைக்கழக நிர்வாக ஊழியர்கள் ஆவர். இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் வேறுபட்ட நிறுவனங்களைச் சேர்ந்த இருபத்திநான்கு அலுவலர்கள் பங்குபற்றினர்.



## 5.7 உற்பத்தித்திறன் மற்றும் நெறிமுறை அரச சேவை கலாச்சாரத்திற்கான பொதுவான தகுதிச் சட்டகம்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் வரும் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையானது அரசதுறையில் உள்ள அலுவலர்களின் திறன்கள் மற்றும் தகுதியை மேம்படுத்துவதற்கான கற்கையை மேற்கொண்டது. நிபுணர் குழுவுடன் இணைந்து இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை மேற்கொண்ட கற்கையின் அடிப்படையில் அரச சேவைத் துறைக்கான பொதுவான தகுதிச் சட்டகம் அபிவிருத்தி செய்யப்பட்டது. இந்த பொதுவான தகுதி சட்டகம் 27 ஜுன் 2017ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம்தில் அங்கீகரிக்கப்பட்டது.

பொதுவான தகுதிச் சட்டகத்திற்கான அமுல்படுத்தல் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு கீழ்வரும் அங்கத்தவர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

| அங்கத்தவரின் பெயர் | நிறுவனம் | பதவி |
|---|---|---|
| பேராசிரியர். காமினி அல்விஸ் | | முன்னாள் சிரேஸ்ட விரிவுரையாளர் |
| திரு.ஆர்.ஏ.கோலித ரணவக | NIBM | தலைவர் (முகாமைத்துவ அபிவிருத்தி) |
| திரு.ஏ.பி.எம்.அச்ரப் | SLIDA | சிரேஸ்ட ஆலோசனையாளர் |
| திரு.சமந்த இரத்நாயக்க | PIM | முகாமைத்துவ ஆலோசனையாளர் |

இதன் அடுத்தபடியாக மேற்குறிப்பிட்ட பொதுவான தகுதிச் சட்டகத்திற்கான பாதை வரைபடத்தை, மனித வள அபிவிருத்தித்துறையில் உள்ள நிபுணர்களின் கருத்துக்கள் மற்றும் விதப்புரைகள் என்பவற்றுடன் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 5.8 இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையின் தொடர் விரிவிரைகள்

எங்கள் சபை, முகாமைத்துவ மட்டத்திலும் அதன் கீழ் பதவிகளிலும் உள்ள அரச சேவை ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு கீழ்வரும் தலைப்புகளில் தொடர்ச்சியான விரிவுரைகளை நடாத்தியது. அரச சேவையில் பல்வேறு துறைகளில் உள்ள பங்குபற்றுனர்கள் பிரதிநிதித்துவம் வகித்தவர்கள், அரச சேவை ஊழியர்களின் நன்மைக்காக நடாத்தப்பட்ட தொடர்ச்சியான விரிவுரைகள் தொடர்பாக தமது நேர்மறையான பதிலளிப்பை வெளிப்படுத்தினர். பல்வேறு விடங்களை உள்ளடக்கி பிரசித்தபெற்ற குழுவின் ஊடாக அரச அலுவலர்களுக்கான தொடர்ச்சியான விரிவுரைகள் நடாத்தப்படும்.

2017ம் ஆண்டு நடாத்தப்பட்ட விரிவுரைகளின் சுருக்கம்.

| தலைப்பு | வள நபரின் பெயர் | திகதி | பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| வாடிக்கையாளர் கவனிப்பு | திரு. தம்மிக கலபுகே | 2017.01.10 | 185 |
| மனித நம்பிக்கை | டாக்டர்.ருவந்தி த சில்வா | 2017.03.07 | 110 |
| முக்கிய மனிதவளப் போக்கு - 2017 | செல்வி. சிரந்தி குரே | 2017.05.04 | 107 |
| அரச சேவை துறையினரின் கணக்கியல் திறன் மேம்படுத்தல் | திரு.ஜே.எம்.யு.பி.ஜயசேகர | 2017.06.22 | 122 |
| சிறந்த ஆளுகை மற்றும் அரச சேவையினரின் வகிபாகம் | டாக்டர்.லொயட் பெர்னாந்து மற்றும் திரு சமந்த இரத்நாயக்க | 2017.10.04 | 120 |
| சைபர் பாதுகாப்பு பேச்சு | திரு.போ'ான் தயாரத்ன | 2017.11.28 | 137 |
| அரசசேவைத் துறைக்கான உற்பத்தித்திறன் பணி முறைகள் பற்றிய அறிமுகம் | செல்வி.அரோ'ா ஜயசுந்தர | 2017.12.14 | 55 |

வாடிக்கையாளர் கவனிப்பு




மனித நம்பிக்கை



முக்கிய மனிதவளப் போக்கு




கணக்கியல் திறன் மேம்படுத்தல



சிறந்த ஆளுகை மற்றும் அரச சேவையினரின் வகிபாகம்



சைபர் பாதுகாப்பு பேச்சு



## 5.9 இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் புள்ளிவிபர தகவல் அறிக்கை

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் தொலைநோக்கிற்கு அமைவாக, இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் முகாமைத்துவம் இலங்கையில் கல்வித்துறை சாந்த நலன்விரும்பிகளின் தகவல் இடைவெளியை நிரப்புவதற்கு புள்ளிவிபர தகவல் அறிக்கையை வெளியிடுவதற்கு தீர்மானத்தை மேற்கொண்டது. இதற்கமைவாக இறுதி தகவல் 2017ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இதில் பொதுக் கல்வி, மூன்றாம் நிலை, வாழ்க்கைத்தொழில் மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் உயர் கல்வித்துறை சார்ந்த முக்கியமான புள்ளிவிபரங்கள் உள்ளடக்கப்பட்டள்ளன. அனைத்து தரவுகளும் வெப்தளம், மத்திய வங்கி வருடாந்த அறிக்கை 2016, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக புள்ளிவிபரங்கள் என்பவற்றில் கிடைக்கப்பெறும் இரண்டாம் தர தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டன. இலங்கை கல்வித்துறை தொடாபாக ஆர்வமுள்ள ஆராய்ச்சியாளர்கள், கொள்கை உருவாக்கலாளர்கள் என்பவர்களுக்கு இந்த தகவல் அறிக்கையில் உள்ள தரவுகள் மிகவும் முக்கியமாகும்.

## 5.10 பணிப்பாளர்களின் கையேடு

கௌரவ பிரதம மந்திரியின் பணிப்புரைக்கு அமைவாக, தேசிய மனித வள அபிவிருத்தி சபை இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்துடன் இணைந்து அரச தொழில்முயற்சி தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கான நல்லாளுகை மீதான கையேட்டினை தற்போதுள்ள வழிகாட்டல்களை இற்றைப்படுத்தி அபிவிருத்தி செய்தது. இந்தக் கையேடு பணிபாளர் சபையின் கவனத்தின் கொள்ள வேண்டிய பரப்புகள் தொடர்பாக வழிகாட்டல்களையும் தெளிவுபடுத்தல்களையும் வழங்குகின்றது. இந்த கையேடு அரசதுறை தொழில்முயற்சி தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு, அவர்களின் நிறுவனத்தை வினைத்திறனுடன் முகாமைப்படுத்துவதற்கு சிறந்த ஆளுகைக்கு வழிகாட்டுகின்றது. 2017 டிசம்பர் 05ம் திகதி நடைபெற்ற இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் வருடாந்த விருது வழங்கும் வைபவத்தில் கௌரவ பிரதம மந்திரிக்கு முதலாவது பிரதி கையளிக்கப்பட்டது.

## 5.11.“அரச துறையில் புதிய வழியில் பணிபுரிதல்” மீதான அறிக்கை

தேசிய மனிதவள அபிவிருத்தி சபை அரசதுறையில் புதிய வழியில் பணிபுரிதலை மேம்படுத்தல் மீதான அறிக்கையை தயார் செய்தது. இந்த அறிக்கை ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டதுடன், இதன் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பதில் வரும்வரை காத்திருக்கப்படுகின்றது.

இந்த அறிக்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினால் நியமிக்கப்பட்ட பொது நிர்வாக அமைச்சு, தொழில் அமைச்சு, பொது சேவைகள் ஆணைக்குழு, இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனம், சிலோன் வணிக சம்மேளனம், ஜெட்விங் குழு, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிஅ ங்கத்தவர்களைக் கொண்ட குழுவினால் தயாரிக்கப்பட்டது.

இந்தக் குழு திரு தர்மசிறி பீரிஸ், திரு என் எம் ஜி எஸ் பளிஹக்கார, திரு மகிந்த மதிஹாஹேவ மற்றும் திருமதி மாலினி பீரிஸ் உள்ளடங்களாக பொது சேவைகள் ஆணைக்குழுவின் ஓய்வுபெற்ற அங்கத்தவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற எழுத்துமூல உள்ளீடுகள் மற்றும் திரு தர்மசிறி பீரிஸின் தனிப்பட்ட பிரசன்டேஷன் என்பவற்றினால் பயனடைந்தது.

இந்த அறிக்கையில் கையாளப்பட்ட விடயங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக பொது சேவை மற்றும் சமூகத்தின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல், உற்பத்தித்திறனை அதிகரித்தல், உடன்பட்ட இலக்குகளுக்கு உள்ளான கடைப்பிடித்தல் உள்ளடங்களாக எந்தவொரு நியமனம் மற்றும் ஊடுறுவும் பொறுப்புணர்வு பொறிமுறைக்கான பகுத்தறிவைப் புகுத்துவதன் ஊடாக மிகச்சிறந்த நிபுணத்துவத்தை ஊக்குவித்தல்.

## 5.12 கணக்காய்வுக் குழுக்களிலல் சிறந்த ஆளுகையை மேம்படுத்தவதற்கு இலங்கை பட்டய நிறுவனம் தேசிய மனித வள அபிவிருத்தி சபையுடன் இணைந்துள்ளது.

தேசிய மனிதவள அபிவிருத்தி சபை இலங்கை பட்டய நிறுவனத்துடன் இணைந்து ‘‘கணக்காய்வுக் குழுவின் வகிபாகம்’’ தொடர்பான செயயலர்வை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் 2017 ஜுலை 06ம் திகதி நடாத்தியது. இதில் பொது தொழில்முயற்சியின் கணக்காய்வுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 180ற்கும் மேற்பட்ட சிரேஸ்ட அரச அலுவலர்கள் பங்குபற்றினர்.

பிரதம மந்திரியின் பணிப்புரையின் கீழ், பொது தொழில்முயற்சியின் தலைவர்களின் திறன்களை உருவாக்குவதற்கும் சிறந்த ஆளுகையை மேம்படுடுத்துவதற்கும் உதவுவதற்குமாக இது மேற்கொள்ளப்பட்டது.

இந்த செயமர்வுக்கு தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் தலைவர், திரு தினேஷ் வீரக்கொடி, உதவி கணக்காளர் நாயகம் திரு.ஈ.ஏ.ஜி.ஆனந்த, ஏர்னஸ்ட் அன்ட் யங் பங்காளி, திரு மானேல் ஜயசிங்க, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறவனத்தின் பொதுத்துறை தலைவர் மற்றும் பொதுத்துறைக்கான கணக்கியல் நியமக் குழுவின் தலைவர் திரு.வி.கனகசபாபதி, கேபிஎம்ஜி பங்காளர் திரு ரியாஸ் மியுலர், பிடிஓ பங்காளர் திரு திஷான் சுபசிங்க ஆகியோர் வளநபர்களாக பங்குபற்றினர். இந்த செயலமர்வின் போது கணக்காய்வுக் குழுக்கள் பயன்பெறும் வகையில் சிறந்த நடைமுறைகள் மற்றும் சிறந்த ஆளுமை மீதான வழிகாட்டல் மற்றும் தெளிவாக்கல்களை வளநபர்கள் வழங்கினர்.

## 5.13 ISO 9001:2015 சான்றளிப்பினை உறுதிப்படுத்தலை இலங்கை தேசிய மனித வள ஆணைக்குழு தொடர்கின்றது.


எதிர்காலத்திற்கு தகைமையுடைய தொழிற்படை எனும் தொலைநோக்குடன் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை இலங்கையில் மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்காக வினைத்திறனுடைய சேவையை வழங்குவதற்கு அர்பணிப்புடன் செயற்படுகின்றது. இந்தக் குறிக்கோளினை அடைவதற்காக ISO 9001:2015 தரக் கொள்கைக்கு அமைவாக செயற்படுவதன் ஊடாக எங்கள் நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகள் மிகவும் உற்பத்தித்திறன் கொண்டவையாகவும் தரமானவையாகவும் அமையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஊழியர்களினால் 07 பெப்பரவரி 2017ம் திகதி மேற்கொள்ளப்பட்ட நுண்ணாய்வின் அடிப்படையில் ISO 9001:2015 தர முகாமைத்துவ முறைமையுடன் நிறுவனம் இணங்குகின்றதென மீண்டும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. புதிய தரக் கொள்கைக்கு அமைவாக, நுண்ணாய்வுக் குழுவின் விதப்புரைத்த வகையில் நிறுவனத்திற்கு அவசியமான அனைத்து ஆவணங்களும் நிறுவனத்தினால் தயார்செய்யப்பட்டது. 2017 இல், தர கையேடு, நடைமுறை கையேடு மற்றும் உள்ளக நுண்ணாய்வுத் திட்டங்களில் சில மாற்றங்கள் உருவாக்கப்பட்டன. நாங்கள், இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உள்ளக நுண்ணாய்வு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை பெற்றுக்கொண்டோம்.


இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தர முகாமைத்துவ முறைமையுடன் இணங்கும் வகையில் தரமான சேவைகளை வழங்குவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

# 6. 2017ம் ஆண்டினுள் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் வெளியீடுகள்


2017ம் ஆண்டில் வெளியிடப்பட்ட வெளியீடுகள் மற்றும் அறிக்கைகளின் உருவங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.




**புள்ளிவிபர தகவல் அறிக்கை 2017**




**பெண் தொழிலாளர் படையை அதிகரிப்பதற்கான பாதை வரைபடம்**




**பணிப்பாளர்களின் கையேடு**

# 7. 31.12.2017ம் திகதியன்றுள்ளவாறான நிதியியல் நிலமைக் கூற்று

இல.ரூபா

| | குறிப்பு | 2017 | 2016 | மதிப்பீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|---|
| **சொத்துகள்** | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 1 | 8,565,644.90 | 9,877,733.94 | 8,757,030.58 |
| பெறுவனவுகள் | 2 | 71,162.82 | 71,162.82 | 71,162.82 |
| கையிருப்புகள் | 3 | 619,970.85 | 564,975.70 | 562,000.00 |
| முற்கொடுப்பனவுகள் | 4 | 164,415.91 | - | 170,000.00 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 5 | 2,836,874.76 | 2,668,029.66 | 2,810,000.00 |
| | | **12,258,069.24** | **13,181,902.12** | **12,370,193.40** |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | |
| உட்கட்டமைப்பு, பொறி மற்றும் உபகரணங்கள் | 6 | 14,805,195.29 | 5,633,698.01 | 13,000,000.00 |
| வாகனங்கள் | 6 | 9,326,611.88 | 13,183,305.94 | 11,864,975.35 |
| ஏனைய சொத்துக்கள் | 6 | 582,804.46 | 779,918.91 | 900,000.00 |
| | | 24,714,611.63 | 19,596,922.86 | 25,764,975.35 |
| **மொத்தச் சொத்துகள்** | | **36,972,680.87** | **32,778,824.98** | **38,135,168.75** |
| **பொறுப்புகள்** | | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| கொடுப்பனவுகள் | 7 | 1,192,086.32 | 846,668.75 | 254,046.47 |
| குறுகிய கால ஏற்பாடுகள் | 8 | 313,742.82 | 313,742.82 | 313,742.82 |
| | | **1,505,829.14** | **1,160,411.57** | **567,789.29** |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | | | |
| ஊழியர் நன்மைகள் | 9 | 1,990,089.75 | 1,509,772.75 | 1,900,000.00 |
| | | **1,990,089.75** | **1,509,772.75** | **1,900,000.00** |
| **மொத்தப் பொறுப்புகள்** | | **3,495,918.89** | **2,670,184.32** | **2,467,789.29** |
| **தேறிய சொத்துக்கள்** | | **33,476,761.98** | **30,108,640.66** | **35,667,379.46** |

**தேறிய சொத்துக்கள்/ உரிமைப் பங்குகள்**
**<u>மூலதனம் வழங்கப்பட்டது</u>**

| | | | |
|---|---|---|---|
| பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் | 3,000,000.00 | 3,000,000.00 | 3,000,000.00 |
| மீள்மதிப்பீட்டு ஓதுக்குகள் | 13,490,249.80 | 13,490,249.8 | 6,000,000.00 |
| அரச நன்கொடைகள் - மூலதனம் | 14,636,523.89 | 15,435,982.49 | 15,500,000.00 |
| திரட்டப்பட்ட மிகை/(பற்றாக்குறை) | 2,349,988.29 | (1,817,591.63) | 2,000,000.00 |
| **மொத்த தேறிய சொத்துகள்/ உரிமைப் பங்குகள்** | 33,476,761.98 | 30,108,640.66 | 26,500,000.00 |

உதவிப் பணிப்பாளர் (நிதி) தலைவர்
திகதி: திகதி:

# 8. நிதிச் செயலாற்றுகை கூற்று

**2017 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று**

இல.ரூபா

| | குறிப்பு | 2017 | 2016 | மதிப்பீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| ஏனைய நன்கொடைகள் | 10 | 21,133,114.00 | 21,500,000.00 | 22,823,801.00 |
| சொத்து அகற்றல் வருமானம் | 11 | 12,623,137.60 | 11,389,837.06 | 15,650,000.00 |
| ஏனைய வருமானம் | 12 | 6,861,867.08 | 1,073,187.14 | 6,000,000.00 |
| **மொத்த வருமானம்** | 13 | (1,068,524.32) | (5,662.59) | (1,000,000.00) |
| ஏனைய நன்கொடைகள் | 14 | 140,792.29 | 185,137.58 | 160,000.00 |
| சொத்து அகற்றல் வருமானம் | | **39,690,386.65** | **34,142,499.19** | **43,633,801.00** |
| **செலவுகள்** | | | | |
| கூலி, சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள் | 15 | 17,443,075.49 | 15,706,158.54 | 17,279,130.00 |
| மானியங்கள் மற்றும் ஏனைய பரிமாற்றல் கொடுப்பனவுகள் | 16 | 6,727,619.63 | 6,663,006.94 | 8,385,000.00 |
| வழங்கல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுகள் | 17 | 680,040.50 | 789,950.36 | 900,000.00 |
| தேய்வு மற்றும் தவணை முறைக் கடன் கரைப்பு | 6 | 5,689,845.88 | 5,076,989.77 | 5,700,000.00 |
| பயணம், பிழைப்பூதியம், கொடுப்பனவுகள் | 18 | 336,527.50 | 189,902.50 | 347,600.00 |
| பயன் மற்றும் சேவைகள் | 19 | 2,993,768.87 | 3,196,272.23 | 3,124,280.00 |
| பராமரிப்பு செலவுகள் | 20 | 1,459,557.36 | 1,396,272.13 | 1,240,000.00 |
| ஏனைய செலவுகள் | 21 | 192,371.50 | 208,988.00 | 193,500.00 |
| **மொத்தச் செலவுகள்** | | **35,522,806.73** | **33,197,495.47** | **37,169,510.00** |
| **மிகை/(பற்றாக்குறை)** | | **4,167,579.92** | **945,003.72** | **6,464,291.00** |

## 9. 2017 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு மாற்றக்கூற்று

இல.ரூபா

| கட்டுப்படுத்தும் நிறுவனத்தின் உரிமையாளர்களின் பண்புக்குணகம் | | | | | |
|---|---|---|---|---|---|
| | பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் | தீர்மானிக்கப்பட்ட ஒதுக்கு | அரச மானியம் - மூலதனம் | திரட்டிய மிகை/(பற்றாக்குறை) | மொத்த தேறிய சொத்து / உரிமைப்பங்கு |
| 01.01.2016 அன்று முன்கொண்டுவரப்பட்ட மீதி | 3,000,000.00 | 2,063,777.2 | 13,148,819.55 | (2,762,595.35) | 5,450,001.40 |
| அகற்றப்பட்ட சொத்துக்கள் மீதி மீள்மதிப்பீட்டு மிகை | - | 11,426,472.60 | - | - | 11,426,472.60 |
| அரசாங்க மானியங்களுக்கு – வருமானத்திற்கு மாற்றப்பட்டது | - | - | (6,656,903.22) | - | (6,656,903.22) |
| தேறிய சொத்து/பங்கு உரிமைப் பற்றாக்குறை/ மிகை என்பவற்றில் இக்காலப்பகுதியில் நேரடியாக அடையாளம் காணப்பட்ட தேறிய வருமானம் | - | - | 13,677,000.00 | - | 13,677,000.00 |
| மீள மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மீதான முன்மீள் மதிப்பீட்டை மீள் அடையாளம் காணல் | - | - | - | - | - |
| வேறுபடும் வருமானம் | - | - | (4,732,933.84) | - | (4,732,933.84) |
| இக்காலப்பகுதியின் மிகை/பற்றாக்குறை | - | - | - | 945,003.72 | 945,003.72 |
| இக்காலப் பகுதியின் அடையாளம் காணப்பட்ட மொத்த வருமானம் மற்றும் செலவு | - | 11,426,472.60 | 2,287,162.94 | 945,003.72 | 14,658,639.26 |
| **முன் கொண்டு செல்லப்பட்ட 31 டிசம்பர் 2016 திகதியில் மீதி** | **3,000,000.00** | **13,490,249.80** | **15,435,982.49** | **(1,817,591.63)** | **30,108,640.66** |
| 01 ஜனவரி 2017 அன்றுள்ளவாறான மீதி | | | | | |
| முன்வருட சீராக்கல் | 3,000,000.00 | 13,490,249.80 | 15,435,982.49 | (1,817,591.63) | 30,108,640.66 |
| அகற்றப்பட்ட சொத்துக்கள் மீதான மீள்பெறுமதி செய்யப்பட்ட மிகை | - | - | - | - | - |
| அரசாங்க மானிய வருமானத்திற்கு மாற்றப்பட்டது | - | - | - | - | - |
| தேறிய/உரிமைப் பங்குகளில் நேரடியாக அடையாளம் காணப்பட்ட தேறிய வருமானம் இக்காலப்பகுதியின் மிகை/பற்றாக்குறை | - | - | 11,823,679.00 | - | 11,823,679.00 |
| வேறுபடும் வருமானம் | - | - | (5,689,845.88) | - | (5,689,845.88) |
| இக்காலப்பகுதியின் மிகை/பற்றாக்குறை | - | - | - | 4,167,579.92 | 4,167,579.92 |
| இக்காலப் பகுதியின் அடையாளம் காணப்பட்ட மொத்த வருமானம் மற்றும் செலவு | - | - | (799,458.60) | 4,167,579.92 | 3,368,121.32 |
| **முன் கொண்டு செல்லப்பட்ட 31 டிசம்பர் 2017 திகதியில் மீதி** | **3,000,000.00** | **13,490,249.80** | **14,636,523.89** | **2,349,988.29** | **33,476,761.98** |

## 10. காசுப் பாச்சல் கூற்று

**31 டிசம்பர் 2016ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றுதிரட்டிய காசுப் பாச்சல் கூற்று**

| | 2017 | 2016 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாச்சல்** | | |
| மிகை/(பற்றாக்குறை) | | 945,003.72 |
| **<u>காசு அற்ற அசைவுகள்</u>** | | |
| பெறுமானத் தேய்வு | | 5,076,989.77 |
| பணிக்கொடை | 480,317.00 | 82,684.87 |
| முன்னைய வருட சீராக்கல் | - | - |
| வேறுபட்ட வருமானம் | (5,689,845.88) | (4,732,933.84) |
| மேலதிக ஏற்பாட்டு கணக்காய்வுக் கட்டணம் | (6,325.00) | (4,481.00) |
| ஊழியக் கடன் வட்டி | (108,396.55) | (93,554.45) |
| கணக்காய்வுக் கட்டணம் | 80,500.00 | 80,500.00 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண விற்பனை மூலமான (உழைப்புகள்)/நட்டங்கள் | | 5,662.59 |
| நுகர்வுக் களஞ்சிய அதிகரிப்புகள் (குறைவுகள்) | | (2,781.07) |
| முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்புகள் (குறைவுகள்) | (164,415.91) | 179,949.64 |
| ஊழியர் கடன அதிகரிப்புகள் (குறைவுகள்) | (418,700.60) | (272,566.68) |
| ஏனைய முற்கொடுப்பனவுகளின் அதிகரிப்புகள் (குறைவுகள் | (15,000.00) | 1,250.00 |
| | 345,417.57 | 529,967.68 |
| கொடுப்பனவுகளின் அதிகரிப்புகள் (குறைவுகள்) | 264,855.50 | (264,855.50) |
| பெறுவனவுகளில் அதிகரிப்புகள் / குறைவுகள் | - | - |
| கொடுப்பனவு செய்யப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் | (74,175.00) | (80,519.00) |
| கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை | - | (433,818.00) |
| அரச மானியம் | 4,890,387.28 | 7,020,096.78 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாச்சல்** | **10,455,573.38** | **8,036,595.20** |

| | | |
|---|---|---|
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாச்சல்** | | |
| கட்டடம் மற்றும் கட்டமைப்புகள் கொள்வனவு | (6,531,265.68) | - |
| தளபாட மற்றுத் பொருத்திகள் கொள்வனவு | (4,235,272.50) | (164,169.00) |
| அலுவலக உபகரணக் கொள்வனவு | (496,274.65) | (74,750.00) |
| மின்சார பொருத்திகள் கொள்வனவு | - | - |
| கணணிக் கொள்வனவு | (527,420.00) | (326,600.00) |
| வாகனக் கொள்வனவு | - | - |
| ஊழியர் கடன் மீதான வட்டி | 108,396.55 | 93,554.45 |
| மென்பொருள் கொள்வனவு | | - |
| புத்தகக் கொள்வனவு | | (11,883.00) |
| ஏனைய சொத்துக்களின் கொள்வனவு | (56,411.30) | - |
| பொறி மற்றும் உபகரண விற்பனையில் இருந்தான வருமானம் | - | 1,000.00 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாச்சல** | **(11,767,662.42)** | **(482,847.55)** |
| **நிதிச் செயற்பாடுகளில் இருந்தான காசுப்பாச்சல்** | | |
| நிதி நடவடிக்கைகயில் இருந்தான தேறிய காசுப் பாச்சல் | **-** | **-** |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் அதிகரிப்பு/ குறைவு) | (1,312,089.04) | 7,553,747.65 |
| இக்காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | 9,877,733.94 | 2,323,986.29 |
| இக்காலப்பகுதியின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | **8,565,644.90** | **9,877,733.94** |

**காசுப் பாச்சல் கூற்றின் குறிப்புகள்**

| | | |
|---|---|---|
| கையில் உள்ள காசு மற்றும் வங்கி மீதி | | |
| மக்கள் வங்கிக் கணக்கு இலக்கம் - 119100120409161 | 8,375,225.10 | 487,712.25 |
| இலங்கை வங்கிக் கணக்கு - 165197 | 190,419.80 | 9,390,021.69 |
| | **8,565,644.90** | **9,877,733.94** |

# 11.குறிப்புகள்

| | | 2017 | 2016 | மதிப்பிடப்பட்டது |
|---|---|---|---|---|
| **காசு மற்றும் காசுக்கு சமமானவை** | 1 | | | |
| மக்கள் வங்கிக் கணக்கு இலக்கம் 119100120409161 | | 8,375,225.10 | 487,712.25 | 8,000,000.00 |
| இலங்கை வங்கிக் கணக்கு 165197 | | 190,419.80 | 9,390,021.69 | 757,030.58 |
| | | **8,565,644.90** | **9,877,733.94** | **8,757,030.58** |
| **கிடைப்பனவுகள்** | 2 | | | |
| நிமல் போப்பகே (முன்னாள் தலைவர்) | | | 71,162.82 | - 71,162.82 |
| | | **71,162.82** | **71,162.82** | **71,162.82** |
| **கையிருப்பு** | 3 | | | |
| நுகர்வுக் களஞ்சியம் | | 619,970.85 | 564,975.70 | 562,000.00 |
| | | **619,970.85** | **564,975.70** | **562,000.00** |
| **முற்கொடுப்பனவுகள்** | 4 | | | |
| வாகனக் காப்புறுதி | | 164,415.91 | - | 170,000.00 |
| | | **164,415.91** | **-** | **170,000.00** |
| **ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | 5 | | | |
| ஊழியர் கடன் - இடர் | | 2,811,874.76 | 2,393,174.16 | 2,800,000.00 |
| விழாக்கால முற்பணம் | | 10,000.00 | 10,000.00 | 10,000.00 |
| மீளளிக்கக்கூடிய வைப்பு | | 15,000.00 | - | - |
| நிர்மாணம் WIP | | - | 264,855.50 | - |
| | | **2,836,874.76** | **2,668,029.66** | **2,810,000.00** |

# ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (குறிப்பு 06)

| | தளபாடங்கள் மறறும் பொறுத்திகள் | | அலுவலக உபகரணங்கள் | | மின்சார பொறுத்திகள் மற்றும் உபகரணங்கள் | | கணணிகள் | | மென்பொருள் | | வாகனங்கள் | | புத்தகங்கள் | | ஏனைய சொத்துகள் | | தளபாடங்கள் மறறும் பொறுத்திகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அறிக்கையிடும் காலம் 01.01.2017 - 31.12.2017 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 |
| ஆரம்ப மீதி | 2,239,912.21 | 2,075,743.21 | 2,935,476.29 | 2,873,646.29 | 66,135.25 | 66,135.25 | 5,190,792.98 | 4,865,592.98 | 776,556.61 | 776,556.61 | 14,200,000.0 | 18,750,000.00 | 98,245,15 | 86,362.15 | 1,278,824.5 | 1,278,824.50 | - | - |
| சேர்த்தல் | 4,235.272.50 | 164,169.00 | 496,274.65 | 74,750.00 | - | - | 527,420.00 | 326,600.00 | - | - | - | 14,200,000.00 | 29,414,84 | 11,883.00 | 56,411.30 | - | 6,531,265.68 | - |
| சீராக்கல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| இல்லாதாக்கல் | (1,510,495.62) | - | (53,707.95) | (12,920.00) | - | - | - | (1,400.00) | - | - | - | (18,750,000.00) | - | - | (257,730.00) | - | - | - |
| முடிவுறுத்தல் மீதி | 4,964,689.09 | 2,239,912.21 | 3,378,042.99 | 2,935,476.29 | 66,135.25 | 66,135.25 | 5,718,212.98 | 5,190,792.98 | 776,556.61 | 776,556.61 | 14,200,000.0 | 14,200,000.00 | 127,659.99 | 98,245.15 | 1,077,505.8 | 1,278,824.50 | 6,531,265.68 | - |
| சேர்க்கப்படட தேய்மானம் (வருட ஆரம்பத்தில்) | 1,044, 791.00 | 833,625.95 | 1,198,822.90 | 921,331.07 | 30,326.33 | 26,061.90 | 2,707,675.64 | 1,877,434.40 | 593,559.46 | 399,420.31 | 1,016,694.06 | 13,552,671.23 | 77,635.08 | 75,299.01 | 519,515.66 | 410,316.50 | - | - |
| சீராக்கல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| தேய்மானம் ( நிதிச் செயலாற்றுகை கூற்றுக்கு அமைவாக) | 334,120.11 | 211,165.05 | 293,842.29 | 284,672.16 | 2,915.80 | 4,264.43 | 894,837.95 | 830,718.32 | 182,280.03 | 194,139.15 | 3,856,694.06 | 3,440,495.43 | 3,676.74 | 2,336.07 | 117,900.12 | 109,199.16 | 3,578.78 | - |
| கழி – சொத்து செலவிடப்படட சேர்க்கப்பட்ட தேய்மானம் | (626,506.18) | - | (30,536.80) | (7,180,33) | - | - | - | (477.08) | - | - | - | - | - | - | (96,366.27) | - | - | - |
| முடிவுறுத்தல் மீதி | - | - | - | - | - | - | - | 2,707,675.64 | - | - | - | (15,976,472.60) | - | - | - | - | - | - |
| தேறிய கொண்டுசெல்லல் தொகை | 752,404.93 | 1,044,791.00 | 1,462,128.39 | 1,198,822.90 | 33,242.12 | 30,326.33 | 3,602,513.59 | 2,707,675.64 | 775,839.49 | 593,559.46 | 4,873,388.12 | 1,016,694.06 | 81,311,82 | 77,635.08 | 541,049.51 | 519,515.66 | 3,578.78 | - |
| ஆரம்ப மீதி | 4,212,284.16 | 1,195,121.21 | 1,915,914.60 | 1,736,653.39 | 32,893.12 | 35,808.92 | 2,115,699.39 | 2,483,117.34 | 717.12 | 182,997.15 | 9,326,611.88 | 13,183,305.94 | 46,346.17 | 20,610.07 | 536,456.29 | 759,308.84 | 6,527,686.90 | - |

| | குறிப்புகள் | 2017 | 2016 | மதிப்பீடுசெய்யப்பட்டது |
|---|---|---|---|---|
| <u>**கொடுப்பனவுகள்**</u> | 7 | | | |
| தொலைபேசி | | 46,851.25 | 21,331.31 | 21,000.00 |
| இணையம் | | 27,380.00 | 13,690.00 | 13,690.00 |
| பத்திரிகை பில் | | 1,990.00 | - | 3,000.00 |
| துப்பரவு மற்றும் பாதுகாப்பு | | 125,356.47 | 125,356.47 | 125,356.47 |
| உள்நாட்டுப் பயணச் செலவு | | 1,050.00 | 2,887.50 | 2,000.00 |
| தற்காலிக சம்பளம் | | 19,000.00 | - | - |
| மேலதிக நேரக் செலவு | | 17,313.93 | 13,841.78 | - |
| விடுமுறைக் கொடுப்பனவு | | - | - | |
| மின்சாரம் மற்றும் தண்ணீர் | | 2,999.48 | 46,295.86 | 50,000.00 |
| புாடசலாலையை கைவிட்டவர்களுக்கான பயிற்சி | | - | - | |
| SME நிகழ்ச்சித்திட்டம் | | - | - | |
| தொழில் சந்தை ஆய்வு | | 250,000.00 | 250,000.00 | - |
| மனிதவள உபாயமார்க்க அபிவிருத்தி | | - | - | |
| வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | | - | 210,925.71 | - |
| MCDP நிகழ்ச்சித்திட்டம் | | - | 35,154.29 | - |
| ஊழியர் நலன்புரி நடவடிக்கைகள் | | - | 3,675.00 | 4,000.00 |
| அலுவலகத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 50,290.65 | 14,662.50 | 16,000.00 |
| மனித மூலதன மாநாடு | | - | 27,315.00 | - |
| பதில்கடமை சம்பளம் | | - | 5,562.08 | - |
| விளம்பரக் கட்டணம் | | - | 76,007.25 | - |
| கட்டடம் மற்றும் கட்டமைப்பு லீமா நிறுத்திவைப்பு | | 445,837.28 | - | - |
| முச்சக்கர வண்டி ஆய்வினை நடத்தல் | | 60,000.00 | - | - |
| பதில்கடமை சம்பளம் | | - | 5,526.08 | 6,000.00 |
| விளம்பரக் கட்டணம் | | | | |
| வாகனத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 60,937.26 | - | - |
| விளம்பரம் - MCDP | | 20,079.00 | - | - |
| | | **1,192,086.32** | **846,668.75** | **254,046.47** |
| | | | | |
| <u>**குறுகிய கால ஏற்பாடுகள்**</u> | 8 | | | |
| கணக்காய்வுக் கட்டணம் – 2014 | | 81,580.00 | - | - |
| கணக்காய்வுக் கட்டணம் – 2015 | | - | 81,580.00 | 81,580.00 |
| கணக்காய்வுக் கட்டணம் – 2016 | | 80,500.00 | 80,500.00 | 80,500.00 |
| கணக்காய்வுக் கட்டணம் - 2017 | | 80,500.00 | 80,500.00 | 80,500.00 |
| ஐயக்கடன் ஏற்பாடு – நிமல் போபகே | | 71,162.82 | 71,162.82 | 71,162.82 |
| | | **313,742.82** | **313,742.82** | **313,742.82** |

| | குறிப்புகள் | 2017 | 2016 | மதிப்பீடுசெய்யப் பட்டது |
|---|---|---|---|---|
| **ஊழியர் நன்மைகள்** | 9 | | | |
| பணிக்கால கொடுப்பனவு ஏற்பாடு | | 1,990,089.75 | 1,509,772.75 | 1,900,000.00 |
| | | 1,990,089.75 | 1,509,772.75 | 1,900,000.00 |
| **அரச மானியம் - மீண்டுவரும்** | 10 | 21,133,114.00 | 21,500,000.00 | 22,823,801.00 |
| | | | | |
| **அரச மானிணம் - மூலதனம்** | 11 | | | |
| அரச மானியம் - அபிவிருத்தி நடவடிக்கைகள் | | 6,933,291.72 | 6,656,903.22 | 9,000,000.00 |
| மானிய வேறுபாடு | | 5,689,845.88 | 4,732,933.84 | 6,650,000.00 |
| | | 12,623,137.60 | 11,389,837.06 | 15,650,000.00 |
| | | | | |
| **வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மீதான இலாபம் (நட்டம்)** | 12 | 6,861,867.08 | 1,073,187.14 | 6,000,000.00 |
| | | 6,861,867.08 | 1,073,187.14 | 6,000,000.00 |
| **அகற்றப்பட்ட சொத்துகள் மீதான இலாபம் (நட்டம்)** | 13 | (1,068,524.32) | (5,662.59) | (1,000,000.00) |
| **ஏனைய வருமானம்** | 14 | | | |
| நானாவித வருமானம் | | 32,395.74 | 91,583.13 | 40,000.00 |
| இடர் கடன் வட்டி | | 108,396.55 | 93,554.45 | 120,000.00 |
| | | 140,792.29 | 185,137.58 | 160,000.00 |
| **கூலி, சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள்** | 15 | | | |
| சம்பளம் மற்றும் கூலி | | 9,639,681.90 | 7,190,064.68 | 9,700,000.00 |
| பதில் கடமை சம்பளம் | | 5,634.93 | 22,534.12 | - |
| விசேட கொடுப்பனவு | | - | 768,331.89 | |
| வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | | 2,530,849.28 | 2,351,322.58 | 2,527,200.00 |
| இடைக்காலக் கொடுப்பனவு | | - | 1,979,677.42 | - |
| சீராக்கல் கொடுப்பனவு | | 1,972,515.79 | 1,010,525.71 | 1,766,930.00 |
| போக்குவரத்துக் கொடுப்பனவு | | 600,000.00 | 400,000.00 | 600,000.00 |
| எரிபொருள் கொடுப்பனவு | | 210,600.00 | 210,600.00 | 800,000.00 |
| ஊ.சே.நி | | 1,348,676.41 | 1,130,291.11 | 1,348,000.00 |
| ஊ.ந.நி | | 337,169.47 | 282,554.24 | 337,000.00 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | | 199,324.96 | 117,509.17 | 192,000.00 |
| விடுமுறைக் கொடுப்பனவு | | 16,805.75 | 9,918.75 | 8,000.00 |
| தற்காலிக சம்பளம் | | 29,500.00 | 150,144.00 | - |
| பணிக்கொடைச் செலவுகள் | | 480,317.00 | 82,684.87 | - |
| தொழில்சார் கொடுப்பனவு | | 72,000.00 | | - |
| | | **17,443,075.49** | **15,706,158.54** | **17,279,130.00** |

| | குறிப்புகள் | 2017 | 2016 | | மதிப்பீடுசெய்ய ப்பட்டது |
|---|---|---|---|---|---|
| **<u>மானியங்கள் மற்றும் ஏனைய மாற்றல் கொடுப்பனவுகள்</u>** | 16 | | | | |
| செய்தித்தாள் | | 290,177.70 | 245,768.00 | | 600,000.00 |
| ஊழியச் சந்தை கற்கை | | 513,512.25 | 431,733.75 | | 100,000.00 |
| ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி | | 924,031.03 | 1,802,098.87 | | 1,000,000.00 |
| மாத்தறை மாவட்ட ஆய்வு | | - | 81,081.90 | | - |
| தர மற்றும் உற்பத்திதிறன் நிகழ்ச்சித்திட்டம் | | 474,833.32 | 144,462.00 | | 250,000.00 |
| தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதற்கு மனிதவள உபாயமார்க்கத்தை அபிவருத்தி செய்தல் | | 497,158.72 | 228,695.00 | | 760,000.00 |
| ரக்கியா அருண நிகழ்ச்சித்திட்டம் | | - | 1,624,177.48 | | - |
| தொழில்நுட்பத் துறையில் திறன் இடைவெளிக் கற்கை | | 19,995.00 | 131,449.25 | | 20,000.00 |
| SME துறையைப் பலப்படுத்தல் | | - | 529,847.25 | | - |
| சுற்றுலாத் துறையில் திறன் இடைவெளிக் கற்கை | | 53,530.60 | 905,510.49 | | 185,000.00 |
| HRM விருதுகள் | | 600 | 1,310.00 | | 50,000.00 |
| பணிப்பாளர் கையேடு (KPMG) | | 1,162,519.39 | 122,620.70 | | 1,200,000.00 |
| மனித மூலதன மாநாடு | | - | 126,203.04 | | - |
| அபிவிருத்திப் பொறிமுறை | | - | 13,165.00 | | - |
| NHRDC ஊழியர் அபிவிருத்தி முன்னெடுப்புகள் | | - | 244,884.16 | | - |
| மீண்டும் வந்தவர்களுக்கான மறுசீரமைப்பு | | 461,165.90 | - | | 600,000.00 |
| தேசிய மனிதவள கொள்கையின் பின்னூட்டல் | | 1,000.00 | - | | 20,000.00 |
| பங்குதாரர் குழுவை நிறுவல் | | 44,911.00 | - | | 100,000.00 |
| தகுதிச் சட்டகத்தை அமுல்படுத்தல் | | 6,360.00 | - | | 200,000.00 |
| வழிகாட்டல் அலகுகளைப் பலப்படுத்தல். | | 31,820.00 | - | | 100,000.00 |
| டெங்கு விழிப்புணர்வு கருத்திட்டம் | | 35,980.00 | - | | 70,000.00 |
| MCDP | | 972,121.80 | - | | 1,100,000.00 |
| புள்ளிவிபர தகவல் அறிக்கை | | 49,266.00 | - | | 100,000.00 |
| முச்சக்கரக் கற்கை | | 818,399.16 | - | | 1,480,000.00 |
| அரச துறையில் புதிய வழியில் பணிபுரிதல் | | 27,591.30 | - | | 50,000.00 |
| விதப்புரைகளை அமுல்படுத்தவதற்கு கைத்தொழிற்துறையுடன் பணிபுரிதல் | | 342,646.46 | - | | 400,000.00 |
| | | **6,727,619.63** | **6,633,006.94** | | **8,385,000.00** |
| | | | | | |

| | குறிப்புகள் | 2017 | 2016 | | மதிப்பீடுசெய்யப்பட்டது |
|---|---|---|---|---|---|
| **வழங்கல்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுகள்** | 17 | | | | |
| எழுது கருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | | 102,990.50 | 327,750.36 | | 300,000.00 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | | 577,050.00 | 419,555.00 | | 600,000.00 |
| சீருடைகள் | | - | 42,645.00 | | - |
| | | 680,040.50 | 789,950.36 | | 900,000.00 |
| **தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்புச் செலவுகள்** | 6 | 5,689,845.88 | 5,076,989.77 | | 5,700,000.00 |
| **பயணச் செலவு, பிழைப்பூதியம் மற்றும் கொடுப்பனவு** | 18 | | | | |
| உள்நாட்டு பயணச் செலவு மற்றும் பிழைப்பூதியம | | 16,527.50 | 15,902.50 | | 27,600.00 |
| கணக்காய்வு அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | | 84,000.00 | 54,000.00 | | 80,000.00 |
| சபை அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | | 236,000.00 | 120,000.00 | | 240,000.00 |
| | | 336,527.50 | 189,902.50 | | 347,600.00 |
| **பயன் மற்றும் சேவைகள்** | 19 | | | | |
| சோலைவரி | | 40,320.00 | 44,800.00 | | 50,000.00 |
| மின்சாரம் | | 548,083.98 | 659,644.42 | | 500,000.00 |
| தண்ணீர் | | 35,247.31 | 40,409.78 | | 40,000.00 |
| தொலைபேசிக் கட்டணம் மற்றும் வாடகை | | 432,962.69 | 311,755.89 | | 500,000.00 |
| தபால் மற்றும் டெலெக்ஸ் கட்டணம் | | 7,245.00 | 17,470.00 | | 100,000.00 |
| சுத்திகரிப்புச் சேவை | | 544,433.67 | 593,927.64 | | 593,930.00 |
| விளம்பரம் | | 48,300.00 | 202,297.50 | | 50,000.00 |
| பாதுகாப்பு சேவை | | 959,843.97 | 910,347.50 | | 910,350.00 |
| இணையம் | | 164,280.00 | 164,280.00 | | 180,000.00 |
| ஏனைய பயனபடுத்தல் மற்றும் ஏனைய சேவைகள் | | 203,052.25 | 232,517.50 | | 200,000.00 |
| சட்டக் கட்டணங்கள் | | 10,000.00 | 19,000.00 | | - |
| | | 2,993,768.87 | 3,196,272.23 | | 3,124,280.00 |
| **பராமரிப்புச் செலவுகள** | 20 | | | | |
| கட்டடம் மற்றும் கட்டமைப்புத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | - | 3,600.00 | | - |
| வாகனத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 838,150.86 | 1,003,375.79 | | 760,000.00 |
| வாகனக் காப்புறுதி | | 419,869.90 | 149,949.64 | | 370,000.00 |
| அலுவலக உபகரணத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 133,180.50 | 117,268.63 | | 10,000.00 |
| கணணித் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 20,872.50 | 57,526.60 | | 50,000.00 |
| ஏனைய சொத்துக்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 47,483.60 | 64,506.47 | | 50,000.00 |
| | | 1,459,557.36 | 1,396,227.13 | | 1,240,000.00 |
| **ஏனைய செலவுகள்** | 21 | | | | |
| கணக்காய்வுக் கட்டணம் | | 80,500.00 | 80,500.00 | | 80,500.00 |
| செய்தித்தாள் மற்றும் பருவ வெளியீகள் | | 22,960.00 | 24,380.00 | | 23,000.00 |
| ஊழியர் நலன்புரி | | 23,045.00 | 47,775.00 | | 25,000.00 |
| புத்துணர்ச்சி உணவுகள் | | 65,866.50 | 56,333.00 | | 65,000.00 |
| | | **192,371.50** | **208,988.00** | | **193,500.00** |

**குறிப்பு இலக்கம் 12 – விளக்கம்**

**வருமானம்**

| | |
|---|---|
| பாடநெறிக் கட்டணம் | 38,550,000.00 |
| கழி | |
| செலவுகள் | |
| டிக்கட்கள் | 7,401077.00 |
| விசா | 953,934.00 |
| மலேசியா புத்ர பல்கலைக்கழகத்திற்கான கொடுப்பனவு | 20,786,167.72 |
| வள நபர் கட்டணம் (உள்ளூர் தொடர்கள்) | 995,714.28 |
| மண்டப முன்பதிவு | 1,125,384.34 |
| சிற்றுண்டிகள் | 19,660.00 |
| ஏனையவை | 75,808.60 |
| அச்சடித்தல் மற்றும் எழுதுகருவிகள் | 101,769.99 |
| ஒருங்கிணைப்பாளர் தொகை | 120,037.99 |
| விருதளிப்பு வைபவம் | 88,500.00 |
| விளம்பரம் | 20,079.00 |
| **மொத்த செலவுகள்** | **31,688,132.92** |
| **வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான மிகை (பற்றாக்குறை)** | **6,861,867.08** |

## 12.குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம், விளக்கக் குறிப்புகள்

1. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை 1997ம் ஆண்டு 18ம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் நிறுவனத்திற்கு மனித வள அபிவிருத்திக்கு அவசியமான அனைத்து மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் சாட்டப்பட்டுள்ளது.

2. **கணக்குகளை விளக்கல் மற்றும் நிதியில் கூற்றுகளை வழங்குவதற்கான அதிகாரம்**

1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை பொதுக் கூட்டுத்தாபனமாக இருப்பதனால், நிறுவனத்தின் நிதியாண்டு முடிவடைந்தவுடன் உடனடியாக, நிறுவனத்தின் அதிகாரத்திற்காக அவ்வருடத்தில் அதன் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வருடாந்த அறிக்கையின் முன்வரைபினை தயாரித்தல் வேண்டும். இந்த அறிக்கை, அக்காலப்பகுதியில் உரிய அமைச்சரினால் வழங்கப்பட்ட யாதேனும் வழிகாட்டல்களைக் கொண்டிருக்கும். இந்த அறிக்கைகளின் பிரதிகளை, வருடம் முடிவடைந்த நான்கு மாதங்களின் பின்னர், உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் (அவர் உரிய அமைச்சராக இல்லாத பட்சத்தில்), திட்டமிடல் அமைச்சர் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல் வேண்டும்.
1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, ஒவ்வொரு நிதியாண்டும், கணக்காய்வாளர் நாயகம் யாதேனும் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்குமாறு கோரப்படின் அவ்வடிவத்தில், ஒவ்வொரு நிதியாண்டும் நிதியாண்டு முடிவடைந்து நான்கு மாதங்களின் பின்னர் நிறுவனத்தின் கணக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு நிறுவனமும் இந்த உப பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைவாக அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தவறின் இச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்ததாகக் கருதப்படுவதுடன், மஜிஸ்ரேட்டின் முன்னர் நம்பிக்கைகைய இழந்தால், ரூபா ஆயிரத்திற்கு குறைவில்லாத தண்டப்பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

3. **இணக்கக் கூற்று**

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் கணக்கீட்டு முறை, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அரச சேவை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றது.

## 4. அளவீட்டு அடிப்படை

சபையின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரய அடிப்படையில், 2008, 2011, 2014 மற்றும் 2016ம் ஆண்டில் இலங்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தினாலும் சுயாதீன மதிப்பீட்டாளர்களினாலும் குறிப்பிட்ட தளபாடம் மற்றும் பொருத்திகள், அலுவலக உபகரணங்கள், மினசார பொருத்திகள் மற்றும் உபகரணங்கள், கணணிகள், வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீடுகள் தவிர்த்து தயாரிக்கப்படுகின்றது.

## 5. சொத்துத்து மதிப்பீட்டுக்கான அடிப்படை

**5.1** சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவை குறைந்து செல்லும் தேய்மானத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பிடப்படுகின்றது.

**5.2** சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு தேய்மானம் அறவிடப்பட்டு மதிப்பிடப்பட்ட பயன்படுத்தல் காலத்தின் பின்னர் பதிவழிப்பு மேற்கொள்ளப்பட்டது.

**5.3** 2009ம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவைகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுக்கு தேய்மானம் வழங்கப்படுவதில்லை மற்றும் அவை அககற்றப்படும் பொழுது முழு ஆண்டுக்கான தேய்மானம் வழங்கப்பட்டது மற்றும் 2009ம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட/அகற்றப்பட்ட திகதியின் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகின்றது.

**5.4** நுகர்வுக் களஞ்சியம் குறைந்த ஆகுசெலவு மற்றும் தேறிய சாத்தியமான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது.

## 6. தேய்மானம்

சொத்துக்களின் வகை மற்றும் தேய்மான வீதங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துக்களின் தன்மை மற்றும் அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டள்ளது.

| | |
|---|---|
| கட்டடம் மற்றும் கட்டமைப்பு | 5% |
| தளபாடம் மற்றும் பொருத்திகள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| மினசாரப் பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 20% |
| கணணிகள் | 20% |
| கணணி மென்பொருள் | 25% |
| வாகனங்கள் | 20% |
| புத்தகங்கள் | 10% |
| ஏனைய சொத்தக்கள் | 10% |

### 7. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரான நிகழ்வுகள்

அனைத்து பொருளாக்கப்பட்ட ஐந்தொகை நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது மற்றும் அவசிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது அல்லது நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கட்டடத்தின் சீரமைப்பு பணிகள் 2017 ஜனவரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டள்ளதுடன் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பச் செலவுகள் அனைத்தும் நடைமுறைச் செலவுகளின் கீழ் குறைவேலையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 8. சொத்து பரிமாற்றம்

தளபாடம் மற்றும் பொருத்திகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் போன்ற சொத்துக்கள் புதுப்பித்தலுக்காக அகற்றப்பட்டுள்ளது. இந்த சொத்துக்கள் வாழ்க்கைத் தொழில் பயிற்சி அதிகாரசபையின் பயிற்சி மத்தியநிலையங்களுக்கு பயன்படுத்துவதற்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த சொத்து மாற்றத்திற்கான உரிய அனுமதி அமைச்சிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

### 9. அரச மானியத்திற்கான கணக்கீடு

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபைக்கு பொதுத் திறைசேரியினால் அரசின் மூலதன மற்றும் மீண்டுவரும் மானியங்களாக கிடைக்கப் பெற்றவையின் மூலம் நிறுவனத்தின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொகை மற்றும் இவ்வருடம் தேய்மானமாக அறிவிடப்பட்ட தொகை என்பவை மூலதனச் சொத்துக்களின் பயன்பாட்டுக்கால முறையியல் அடிப்படை மீதான வருமானமாக அடையாளம் காணப்பட்டது.

### 10. ஓய்வூதிய நன்மைச் செலவு

#### 10.1 பங்களிப்பு திட்டத்தை வரையறுத்தல் – ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு தகைமை பெற்ற அனைத்து ஊழியர்களுக்குமான பங்களிப்பு உரிய பங்களிப்பு நிதியத்தின் ஊடாக உரிய விதிமுறைகளின் அமைவாக அணவல் செய்யப்பட்டது. அனைத்து பங்களிப்புகளும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு அமைவாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

#### 10.2 ஓய்வூதியக் பணிக்கொடை

1983ம் ஆண்டு 12ம் இலக்க ஓய்வூதிய கொடுப்பனவுச்ச் சட்டத்தின் கீழ் வரும் அனைத்து ஊழியர்களுக்குமான கொடுப்பனவுகள், இலங்கை கணக்கியல் நியம இலக்கம் 19இல் குறிப்பிடப்பட்ட 'ஊழியர் நன்மைகள்' என்பதற்கு அமைவாக நிதிக்கூற்றில் ஓய்வூதியப்

பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. பணிக்கொடை பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படவில்லை அல்லது அட்டுறுவாக பெறுமதியிடப்படவில்லை.

**11. நிதிச் செயற்பாடுகள்**

சபை அதன் மூலதனச் சொத்துக்களின் தொழிற்பாடு மற்றும் பராமரித்தல் என்பவற்றின் போது வினைத்திறமையுடன் செயற்பட்டதுடன் வருமானத்தை அறவிட்டது. வருமானச் செலவுகளின் மிகை அல்லது பற்றாக்குறை, அனைத்து பொறுப்புகள் மற்றும் சொத்துக்களின் தேய்மானம் என்வற்றின் ஏற்பாடுகளின் பின்னர் ஏற்பட்டதாகும்.

**12. காசுப் பாச்சல் கூற்று**

இலங்கை அரசதுறை கணக்கியல் நியமம் 2 இன் 27ம் பிரிவில் விபரிக்கப்பட்டதற்கு அமைவாக மறைமுக முறை பயன்படுத்தப்பட்டு காசுப் பாச்சல்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**13. அமைச்சினால் சாட்டப்பட்ட வாகனங்கள்**

01.02.2016ம் திகதியில் இருந்து தற்காலிக அடிப்படையில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபைக்கு WP- PD 6170 எனும் வாகன இலக்கம் மற்றும் JNICJUD22Z0116541 செஸி இலக்கமுடைய வாகனம் சாட்டப்பட்டுள்ளது.

# 13.கணக்காய்வு அறிக்கை மற்றும் பதில

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. வீர்வை/ஈ/என்எச்ஆர்டீசீ/1/17/15 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | දිනය<br>திகதி<br>Date 2018 யூலை 19 |

தலைவர்,
இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை

**இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1997 இன் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமானம் ரூபா 1,192,086 ஆக இருநததுடன் அதில் உழைப்புச் சந்தை கணிப்பீட்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 250,000 ஆன மீதியென்று ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யப்படாமல் காணப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

1997 இன் 18 ஆம் இலக்க மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பேரவையினால் ஒரு நிதியாண்டிற்காக ஆகக் குறைந்தது 12 கூட்டங்கள் கூட்டப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்காக 04 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் போது பேரவையின் நிதி விளைவுகள் ரூபா 4,167,580 மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 945,003 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,222,577 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ரூபா 5,788,680 இலாபம் உழைத்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டின் போது பற்றாக்குறையொன்றும் ஏனைய ஆண்டுகளில் நிதி மிகையொன்றினையும் காண்பித்தன. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொண்டதன் பின்னர் பேரவையின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டில் ரூபா 9,634,876 இலிருந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 21,610,655 வரை தொடர்ச்சியான அதிகரிப்பொன்று தென்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடுகளும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் திருத்திய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் 29 செயற்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை பூர்த்தி செய்வதற்காக ரூபா 15.65 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்திட்டங்கள் என்பவற்றை அமுல்படுத்துவதற்காக ரூபா 17.39 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அளவினை மிகைத்து ரூபா 1.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 2.93 மில்லியனான 08 நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்திட்டங்கள் என்பவற்றை பூர்ததி செய்ய முடியாதிருந்ததுடன் அதற்கிடையே ரூபா 0.65 மில்லியனான 03 நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக செயலாற்றல் 50 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(இ) தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி பேரவையினால் வருடாந்தம் 2 சஞ்சிகைகள தயாரித்து வெளியிடுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் போது அதில் ஒரு சஞ்சிகையே வழங்கப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்குரியதாக மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பாக இலங்கை தேசிய பேரவையினால் தமது விடயப்பரப்பின் கீழ் வரும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக தெளிவாக அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

பேரவையினுள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸதாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலமும் ஆண்டின் போது எவ்வித கணக்காய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரால் வழங்கப்பட்டிருந்த 2011 நவம்பர் 15 ஆந் திகதிய டீஎம்ஏ/06 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் மூலம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதியளவு மதிப்பிடுவதற்காக உள்ளகக் கணக்காய்வின் தேவைப்பாடு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டிற்கான பாதீடு 2017 திசெம்பர் மாதத்தின் போது திருத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக பேரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருத்திய பாதீட்டின் பிரகாரம் மீண்டெழும் செலவினங்களில் 10 சதவீத்தலிருந்து 65 சதவீதம் வரையும் மூலதனச் செலவினங்களில் 20 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையில் விலகல் அவதானிக்கப்பட்டது. பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாத கணனி கொள்வனவிற்காக ரூபா 527,420 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வாகனக் கொள்வனவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 400,000 ஆன முழு நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

**6.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

---

நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காணப்படும் ரூபா 354,332 தொகையான 26 நிலையான சொத்து உருப்படிகளில் பற்றாக்குறை தொடர்பாக 2015 நவம்பர் 19 ஆந் திகதிய பரிசோதனை அறிக்கையிலான பரிந்துரைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படவேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் கட்டுப்பாடு | சொத்துக்களை அகற்றும் போது சரியான நடைமுறைகளைப் பின்பற்றாமை. |
| (ஆ) செயலாற்றல் | சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படாமை. |

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

**இலங்கை மனித வள அபிவிருத்தி பேரவையின் 30 டிசம்பர் 2017ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று தொடர்பாக 1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் (2)14சீ பந்திக்கு அமைவாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.**

மேற்குறித்த விடயம் தொடர்பக உங்கள் இலக்கம் VTY/E/NHRDC/1/17/15 மற்றும் 20.04.2017ம் திகதி கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக. அதற்கமைவாக எனது தெளிவாக்கலை கீழ்வருமாறு சமர்ப்பிக்கின்றேன்.

**2.4 கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதி**

2017 டிசம்பர் மாதத்தினுள் கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவினுள் Labour Market Report தயாரிப்பதற்கான செலவான ரூபா 250,000.00 தொகையும் உள்ளடங்கியுள்ளது. இந்தப் பணியைப் பொறுப்பேற்ற பேராசிரியர் திரு துனுசிங்க உரிய தினத்தில் கற்கை அறிக்கையை சமர்ப்பிக்காததனால் இந்தக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டது. இந்த அறிக்கையை இவ்வருடத்தினுள் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

**2.3 சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை.**

நிர்வாகக் குழுவின் அமைப்பை பார்க்கும் பொழுது அந்த அங்கத்தவர்களை ஒவ்வொரு மாதமும் அழைப்பது கடினமான காரியமாகும். அதேபோல் நிறுவனத்தின் பணிகளைப் பார்க்கும் பொழுது ஒவ்வொரு மாதமும் நிர்வாகக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கான விடயங்கள் இருப்பதில்லை. அத்துடன் நிர்வாகக் குழுக்கூட்டத்தை நடத்துவதற்கு ரூபா 100,000 மேல் செலவாகும். அதனால் நோக்கங்களின்றி நிர்வாக சபைக் கூட்டத்தை நடாத்துவது பயனற்ற செலவாகும். அதனால் செயலாற்றுகை இருக்கக்கூடிய வகையிலும் நிர்வாக சபையின் அனுமதி அவசியமான பொழுதிலும் நிர்வாக சபைக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. ஒவ்வொரு கூட்டுத்திலும் செயலாற்றுகை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக நிர்வாக சபை கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், ஒவ்வொரு கூட்டத்திலும் மனித வள அபிவிருத்தி தொடர்பான கொள்கை விடயத்தின் கீழ் விசேட சமர்ப்பித்தல் மற்றும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகின்றது. 2017ம் ஆண்டு கீழ்வரும் விடங்கள் கலந்துரையாடப்பட்டன.

- New Ways of Working in the Public Sector
- "Resolving the Impending Staff Shortage in the Tourism Industry"
- Labour Law Reforms
- Create learning and development opportunities for public sector staff by collaborating with foreign Universities.
- identify strategies to redeploy three-wheeler drivers into the industry
- Skilled workers for the technology sector: Partner with industry launch an accelerated training program to generate 1000 young data professionals over 5 years. i.e Data Science program

- Competency Framework for the Public Sector.
- Directors` Handbook on Good Governance

**4. <u>தொழிற்பாட்டு மீளாய்வு</u>**

4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வு

(அ) பேரவையின் அலுவலக நவீனமயமாக்கல் மற்றும் 5எஸ் அறிமுகப்படுத்தல் 2016 மற்றும் 2017 எனும் இரு ஆண்டுகளுக்கும் நடாத்தப்பட்ட கருத்திட்டமாகும். இதற்காக 2016ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூபா 5,937,000.00வும் 2017 வரவுசெலவுத் திட்டத்தில் ரூபா 4,200,000.00 வும் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நவீனமயப்படுத்தல் பணிகள் 2016ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2017ம் ஆண்டிலேயே பூர்த்திசெய்யப்பட்டது.

இந்த கருத்திட்டம் இரண்டு வருடங்களுக்கு இருந்தமையினால் அந்த 2 வருடங்களில் காணப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டது. அந்தக் காலத்திற்கான ஒதுக்கீடான ரூபா 10.13 மில்லியனின் கீழ் செலவு செய்யப்பட்டு கருத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டது.

(ஆ) இவ்வருத்த்தினுள் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் 50 சதவீதத்திற்கும் குறைவான பௌதிக செயலாற்றுகையைக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 03 தொடர்பான விடயங்கள் கீழ்வருமாறு,

**(இ) பாடசாலை வழிகாட்டல் அலகினை பலப்படுத்தல்**

தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் அலகுகளை பலப்படுத்தும் கருத்திட்டத்தினுள் இலங்கை வணிக சம்பளேனத்துடன் கலந்துரையாடல்கள் சில மேற்கொண்ட பொழுதிலும், இதற்காக தனியார் நிறுவனங்கள் பங்கேற்கவில்லை. அதனால் 2018ம் ஆண்டு 25 பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் தேவை பற்றிய கற்கையை மேற்கொண்டு கல்வி அமைச்சுடன் இணைந்து நான்கு மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 4 பாடசாலைகளில் தொழில் வழிகாட்டலை பலப்படுத்தலை நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தக்கூடிய வகையில் இந்த கருத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**முச்சக்கரவண்டி சாரதிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான உபாயமார்க்கம்.**

முச்சக்கர வண்டி சாரதிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான உபாயமார்க்க ஆராய்வுக்கு உரிய தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூடட்டத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது அதனை பதிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## HCM Awards

இந்த விருதினை தனியார்துறை மற்றும் அரசதுறை இரண்டிற்கும் தனித்தனியாக மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் தனியார் துறைக்கான விருது வழங்கும் வைபவம் AHRP நிறுவனத்துடன் இணைந்து வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டது. எனினும் அரச பிரிவினருக்கான **“HCM Awards”** நிகழ்ச்சித்திட்டத்திற்காக நடாத்தப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அரசதுறையைச் சார்ந்த மிகச்சிலரே பங்குபற்றியிருந்ததனால் போட்டியை நடாத்துவதற்கு போதுமானவர்கள் இல்லை என்பது தெரியவந்தது. அத்துடன், இதற்கான விதிகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதனை திறம்பட நடத்த முடியாது என்பதனால் அது கைவிடப்பட்டது. (ஈ) ஜேர்னலைத் தயாரிப்பதற்கான கடிதங்கள் கோரப்பட்டு பல தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்ட போதிலும் கடிதங்களும் அறிக்கைகளும் கிடைக்காததன் காரணமாக ஒரு ஜேர்னல் மட்டும் தயாரிக்கப்பட்டது.

## 5. நிலையான அபிவிருத்தி

### 5.1 நிலையான அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

நிலையான நோக்கத்தை அடைவதற்கான ஆவணமொன்று 2017ம் ஆண்டு தயாரிக்கப்படவில்லை எனினும், அந்த நோக்கத்தை அடைவதற்காக அது தொடர்பான கருத்திட்டத்தை 2017 மற்றும் 2018ம் ஆண்டுகளில் செயற்படுத்துவதற்காக திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. உதாரணமாக

- திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல் கருத்திட்டம்.
- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை மேம்படுத்தல் கருத்திட்டம்.

அத்துடன் எதிர்காலத்தில் இந்த நிலையான நோக்கத்தை அடைவாற்காக உரிய ஆவணம் தயாரிக்கப்படுவதுடன், அது தொடர்பாக அலுவலர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர்.

## 06. கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி

### 6.1 உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வு பிரிவினை நிறுவுவது தொடர்பாக 2016ம் ஆண்டு முகாமைத்துவ திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை. எனினும் 2017ம் ஆண்டிலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக அமைச்சின் ஊடாக அலுவலர் ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் வேலை அதிகமான காரணத்தினால் அந்த அலுவலரும் சமூகமளிக்கவில்லை.

**6.2 வரவுசெலவுத்திட்ட நிர்வாகம்**

(அ) 2017 டிசம்பர் மாதம் திருத்தப்பட்ட வரவுசெலவு ஆவணத்திற்கான அனுமதி 2018 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு பெறப்பட்டது.

(ஆ) மூலதன செலவு வேறுபாட்டுக்கு பிரதான காரணம் நிறுவன மறுசீரமைப்புக்கு மேற்கொள்ள வேண்டியிருந்த செலவாகும். இதற்காக வரவுசெலவுத் திட்டத்தில் ரூபா 6,937,000.00 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதனைப் பயன்படுத்தி செலவுகள் மேற்கொள்ப்பட்டது 2017ம் ஆண்டு அந்த பணிகள் நிறைவடைந்ததன் பின்னராகும்.

**6.3 தீர்க்கப்படாத கணக்காய்வுக்கான காரணம்**

நிலையான சொத்து ஆவணத்தில் காணப்பட்ட 26வது அயிடம் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழு அறிக்கை 20.12.2017ம் ஆண்டு கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் விதப்புரையை செயற்படுத்துவது தொடர்பாக 03.04.2018ம் ஆண்டு நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஆலோசனை பெறப்பட்டுள்ளதுடன் அடுத்த பொதுச் சபைக் கூட்டத்தில் அந்த தீர்மானத்தை சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டதன் பின்னர் அந்தத் தொகையை கணக்கில் இருந்து நீக்குமாறு அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றுள்ளது.

கே.ஏ.லலிததீர
பணிப்பாளர்
தலைவருக்காக